# சிநேகாவின் சிகப்பு டைரி...



ராஜேஷ்குமார்



திகில் நாவல்

# 1

ஸ்ரீனிவாசநகர் போலீஸ் ஸ்டேஷன்.

நேரம் நள்ளிரவைத் தாண்டிய 2.25 மணி. கள்ளச்சாராய வேட்டைக்குப் போய் யாரும் பிடிபடாத கோபத்தோடு ஒரு சிகரெட்டை ஊதி புகையாய் மாற்றிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் சார்லஸ் பக்கத்து மேஜையில் இருந்த டெலிபோன் கூப்பிட்டதும் புகை கசியும் வாயோடு ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

"ஹலோ..."

மறுமுனையில் பதட்டமான ஒரு பெண் குரல் கேட்டது.

"அது ஸ்ரீனிவாச நகர் போலீஸ் ஸ்டேஷன் தானே?"

"ஆமா..."

"இன்ஸ்பெக்டர் இருக்காரா?"

"நான் இன்ஸ்பெக்டர்தான் பேசறேன்"

"இன்ஸ்பெக்டர்...! நான் நித்யகலா"

"ஆக்ட்ரஸ் நித்யகலாவா...?"

"ஆமா..."

சார்லஸ் உடனே பவ்யமானார்.

"சொல்லுங்க மேடம்..."

"நீங்க உடனே புறப்பட்டு என்னோட பங்களாவுக்கு வரணும்..."

"இப்பவேயா...?"

"எஸ்..."

"என்ன விஷயம் மேடம். ரசிகர்கள் யாராவது வந்து இந்த நேரத்துல தொந்தரவு தர்றாங்களா...?"

"அதில்லை இன்ஸ்பெக்டர்..."



"தென்... என்ன ப்ராப்ளம் மேடம்...?"

"இன்ஸ்பெக்டர்... நான் சூட்டிங் முடிஞ்சு இப்பத்தான் வீட்டுக்கு வந்தேன். வந்ததும் ஒரு குளியல் போடலாம்ன்னு பாத்ரூம்க்குள்ளே நுழைந்தேன். நுழைஞ்சதும் ஏதோ கெட்ட வாசனை அடிச்சது. பாத்டப்பை பார்க்கிறேன். அதுக்குள்ளே திட்டு திட்டா ரத்தம். அந்த ரத்தக்கறைகளுக்கு மத்தியில் துண்டு துண்டாய் மனித விரல்கள். உரோமக்கற்றைகள்."

சார்லஸ் பரபரப்பானார்.

"பாத்டப்புக்குள்ளே மனித விரல்கள், உரோமக்கற்றைகளை தவிர வேற ஏதாவது மனித உறுப்புகள் இருந்ததா...?"

"நான் சரியா பார்க்கலை இன்ஸ்பெக்டர். ரோமத்தையும் விரல்களையும் பார்த்ததுமே எனக்கு மயக்கம்வர்றமாதிரி ஆயிடுச்சு. உடனே பாத்ருமைவிட்டு வெளியே வந்துட்டேன்."

"வீட்ல இப்ப யார் யார் இருக்காங்க?"

"வாட்ச்மேன், வேலைக்காரி, சமையல் காரன்"

"உங்க ரிலேட்டிவிஸ்...?"

"எனக்கு இங்கே ரிலேட்டிவ்ஸ் யாரும் கிடையாது இன்ஸ்பெக்டர். அப்பா, அம்மா ரெண்டுபேரும் கிராமத்துல இருக்காங்க."

"சரி... வாட்ச்மேன், வேலைக்காரி, சமையல்காரன் இவங்களுக்கெல்லாம் இந்த பாத்டப் விஷயம் தெரியுமா...?

"தெரியாது."

"ஏன் சொல்லலை...?"

"என்னமோ தெரியலை இன்ஸ்பெக்டர். மொதல்ல போலீஸுக்கு போன் பண்ணணும்னு தோணிச்சு. உடனே அவரச போலீஸுக்கு

போன்பண்ணிஒருகம்ப்ளயிண்ட்தரணுமன்னு சொன்னேன். இவங்க உங்க போலீஸ் ஸ்டேஷன் போன் நெம்பர் கொடுத்து அங்கே இன்ஃபார்ம் பண்ணச் சொன்னாங்க. அதான் இப்ப உங்ககிட்ட பேசிட்டிருக்கேன்..."

"ஓ.கே. மேடம்... நான் இப்பவே புறப்பட்டு உங்க பங்களாவுக்கு வர்றேன். கரக்ட் அட்ரஸ் சொல்லுங்க"

சார்லஸ் ரிஸீவரை தட்டென்று வைத்து விட்டு கையில் இருந்த சிகரெட்டை அவசர மாய் ஒரு இழுப்பு இழுத்து விட்டு ஆஷ் ட்ரேயில் விட்டு நசுக்கிக் கொண்டே குரல் கொடுத்தார்.

"கான்ஸ்டபிள்"

"ஸார்"

"ஜீப் ரெடி பண்ணு"

கான்ஸ்டபிள் வெளியே போக சார்லஸ் தலைக்கு தொப்பியைக் கொடுத்துக் கொண்டே ஸ்டேஷனிலிருந்தும் வெளிப் பட்டார்.

இரண்டுகான்ஸ்டபிள்களோடுகனைத்துக் கொண்டிருந்த ஜீப்பின் முன்பக்கம் ஏறி உட்கார்ந்தார்.

"டிரைவர்"

"ஸார்"

"நடிகை நித்யகலா வீடு தெரியுமா?"

"தெரியும் ஸார்"

"விடு..."

ஜீப் புறப்பட்டது.

சென்னையின் ஆள் நடமாட்டம் இல்லாத வெளிச்சமான தெருக்களில் ஜீப் ஓடியது.

சில நிமிஷ பயணம்.



போட் கிளப் ரோடு வர பக்கத்திலேயே கிராஸ்ஃபீல்ட் அவென்யூ என்று போர்டு வழி காட்ட ஜீப் அதில்நுழைந்துஇருபுறமும்வளர்ந் திருந்த மரக்கன்றுக்கு மத்தியில் ரெட்லைட் வெளிச்சத்தை உமிழ்ந்தபடி ஓடியது. இருட்டில் புதைந்து இருந்த பங்களாக்களில் அல்சேஷன் நாய்களின் குரைப்புசத்தம் விட்டு விட்டு கேட்டது.

அரைகிலோமீட்டர்தூரம்உள்ளேபோனதும் ஜீப் வேகத்தைக் குறைத்துக் கொண்டு அந்த பிரமாண்டமான காம்பௌண்ட் கேட்டுக்கு முன்பாய் போய் நின்றது.

"பீங்க்..."

ஹாரன் கொடுத்தது.

ஹாரன் சத்தம் கேட்ட அடுத்த விநாடியே பெரிய கேட்டின் ஓரமாய் இருந்த விக்கெட் டோர் திறக்கப்பட்டு ஒரு வாட்ச்மேனின் மீசை முகம் எட்டிப்பார்த்தது.

சார்லஸ் கையசைத்தார்.

"இங்கே வாய்யா..."

வாட்ச்மேன் ஓடிவந்தான். போலீஸைப் பார்த்ததும் லேசாய் முகம் மாறி தயக்கமாய் நெற்றிக்கு கையைக் கொண்டு போய் சல்யூட் வைத்தான்.

சார்லஸ் வாட்ச்மேனின் சல்யூட்டை பொருட்படுத்தாமல் சொன்னார்.

"மேடம் போன் பண்ணியிருந்தாங்க. கேட்டை தொறந்து விடு..."

வாட்ச்மேன் கும்பிட்டான்.

"அய்யா! மன்னிக்கனும். நீங்க வருவீங் கன்னு அம்மா கிட்டயிருந்து எனக்கு எந்த தகவலும் இல்லை. அம்மா கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கலாம்ங்களா?"

"ம்... கேட்டுக்கோ..."

வாட்ச்மேன் விக்கட் டோர்க்குள் ஓடிப் போய் செக்யூரிட்டி கூண்டுக்குள் நுழைந்து அங்கிருந்த அன்டர்காம் ரிஸீவரை எடுத்து காதுக்கு பொருத்திக்கொண்டு ஒரு பட்டனைத் தட்டி விட்டு காத்திருந்தான்.

அரை நிமிஷ நேரத்துக்கு பிறகு மறுமுனையில்நித்யகலாவின்தூக்கக்கலக்கக் குரல் கேட்டது.

"யாரு...?"

"அம்மா... நான் வாட்ச்மேன்"

"என்ன...?"

"உங்களைப் பார்கிறதுக்காக போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருக்காரும்மா..."

"என்னது...! போலீஸ் இன்ஸ்பெக்டரா?"

"ஆமாங்கம்மா..."

"எதுக்காக வந்திருக்காங்க...?"

"நீங்கதான் போன் பண்ணி வரச் சொன் னீங்களாம். இன்ஸ்பெக்டர் சொல்றார்."

"என்னது...! நான் போன் பண்ணி அவரை வரச் சொன்னேனா...?"

"அவர் அப்படித்தாம்மா சொல்றார்..."

"நான் அப்படியொரு போன் பண்ணவே இல்லையே...?"

"இப்ப என்னம்மா பண்றது... அவங்களை உள்ளே விடவா... வேண்டாமா...?"

"உள்ளே விடாதே... வந்திருக்கிறவங்க உண்மையான போலீஸா இருக்கமாட்டாங்க"

"இல்லீங்கம்மா...! அவங்க உண்மையான போலீஸ்தான். வந்த இன்ஸ்பெக்டரை நான் நிறைய தடவை பார்த்திருக்கேன்"

நித்யகலா சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு சொன்னாள்.



"அந்த இன்ஸ்பெக்டர்கிட்ட ரிஸீவரைக் கொடுத்து கொஞ்சம் பேசச் சொல்லு..."

"சரிங்கம்மா..."

வாட்ச்மேன் ரிஸீவரை ஒருக்களித்து வைத்துவிட்டு கேட்டுக்கு வெளியே வந்து சார்லஸ்ஸிடம் விஷயத்தை சொல்ல சார்லஸ் எரிச்சலோடு ஜீப்பிலிருந்து இறங்கிப் போய் ரிஸீவரை எடுத்தார்.

"மேடம்...! நான் இன்ஸ்பெக்டர் சார்லஸ். ஸ்ரீநிவாச நகர் போலீஸ் ஸ்டேஷன் பீட்..."

நித்யகலா ஆச்சர்யக் குரலில் கேட்டாள்.

"இன்ஸ்பெக்டர்...! நான் உங்களுக்கு போன் பண்ணியிருந்தேனா?"

"ஆமோ மேடம்..."

"எப்போ...?"

"பதினைஞ்சு நிமிஷத்துக்கு முந்தி"

"ஸாரி இன்ஸ்பெக்டர்! நான் உங்களுக்கு-போன் பண்ணலை. யாரோ உங்க கூட விளையாடிருக்காங்க"

"இல்ல மேடம்... நீங்கதான் பேசினீங்க. அயாம் ஷ்யூர் அபௌட் இட்..."

"சரி... எதுக்காக உங்களை வரச்சொன்னேன்"

"அது... வந்து... வந்து..."

"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்"

"உங்க குளியலறை பாத்டப்பில் ரத்தக்கறையும் மனித விரல்களும் ரோமங்களும் இருக்கிறதாகவும் உடனே வந்து பார்க்கும் படியாகவும் போன் பண்ணியிருந்தீங்க"

நித்யகலா மறுமுனையில் கோபமானாள்.

"இன்ஸ்பெக்டர்...! வாட் நான்சென்ஸ்... யூ... ஆர் டாக்கிங். என்னோட குளியலறை

பாத்டப்பில் ரத்தக்கறை, மனித விரல்கள், ரோமமா...?"

"மேடம்... நீங்க கோபப்படறதுல எந்த நியாமமும் இல்லை. எனக்கு வந்த போன்கால் அப்படி"

"டெலிபோன்ல கேட்டது என்னோட வாய்ஸ்தானா...?"

"இப்போ நீங்க பேசிட்டிருக்கிற இதே வாய்ஸ்தான்."

"இன்ஸ்பெக்டர்... நீங்க சொல்றது எனக்கு குழப்பமாயிருக்கு..."

"எனக்கும் இப்போ அதே நிலமைதான்...! பை த பை இது சம்பந்தமா உங்க கிட்டே பேசணும். உள்ளே வந்து உங்களைப் பார்க்கலாமா?"

"ப்ளீஸ்... வாங்க..."

சார்லஸ் ரிஸீவரை வைத்துவிட்டு ஜீப்புக்கு வர வாட்ச்மேன் கேட்டை திறந்து வைத்தான்.

ஜீப் உள்ளே போய் போர்டிகோவில் நின்றிருந்த டாட்டா எஸ்டேட் கார்க்கு பின் பக்கமாய் போய் மௌனமாக சார்லஸ் இறங்க போர்டிகோ வரந்தாவில் கருநீல நைட் கவுனில் நித்யகலா ஒரு தேவதையைப் போல் வெளிச்சமாய் நின்றிருந்தாள். லட்சக் கணக்கான ரசிகர்களின் கனவுக்கன்னியாய் இருந்து கொண்டிருக்கும் நித்யகலாவை சார்லஸ் அப்போதுதான் நேரில் முதல் தடவையாய் பார்க்கிறபடியால் ஒருவித பிரமிப்புக்கு உள்ளாகியிருந்தார்.

"வாங்க... இன்ஸ்பெக்டர்..."

நித்யகலா கவலை முகமாய் வரவேற்று உள்ளே வரவேற்பு அறைக்கு கூட்டிப்போய்



கண் ஒளி சித்தர்



இந்தியாவில் சர்க்கரை வியாதிக்கு அடுத்தபடியாக, பார்வைக் குறைபாடு பிரச்சனை விரைவில் முன்னிலை வகிக்கும் என ஓர் ஆய்வு கூறுகிறது. எங்கெல்லாம் கணிப்பொறி வளர்ச்சியடைகிறதோ அங்கெல்லாம் பார்வைக் குறைபாடு தழைத்தோங்கும். உணவுக் கட்டுப்பாடின்மையும் இதற்கு ஓர் காரணம். கண் மங்கல், தூரப் பார்வை, கிட்டப் பார்வை, கேட்ராக்ட், கண் பூ, கண்ணில் நீர்வடிதல், நாள் பட்ட கண் வியாதி, கண்ணில் சதை வளர்ச்சி, வெள்ளெழுத்துப் போன்ற கண்களில் தோன்றும் 96 வகையான வியாதிகளுக்கும் "எந்தவித அறுவை சிகிச்சையின்றி" சித்த மருத்துவம் மூலம் குணப்படுத்தி வருகிறார் மானாமதுரை கோமதி கண் மருத்துவமனை நிறுவனர் டாக்டர். B. பரமசிவம், R.S.M.P. அமெரிக்கன் பயோகிராபிக்கல் இன்ஸ்டிட்யூட்டில் ரிசர்ச் போர்டு ஆப் அட்வைஸர் கவுரவ பட்டம் கொடுத்து இவரை சிறப்பித்துள்ளார்கள். இவரது நிகழ்ச்சி ராஜ் தொலைக்காட்சியைத் தொடர்ந்து தற்பொழுது ஜெயா ப்ளஸ்ஸிலும் ஒளிபரப்பாகிறது. (வியாழன் தோறும் காலை 7.30-8.00) தமிழகத்திலுள்ள ஏழை வியாதியஸ்தர்களுக்கு ஆங்கில மருத்துவர்களால் முடியாது என கைவிடப்பட்ட கண் நோய்களை அறுவை சிகிச்சை இல்லாமல் மூலிகை சிகிச்சை மூலம் மூலிகை கேப்சூலை உள்ளுக்கு சாப்பிடக் கொடுத்து குணப்படுத்தி வருகிறார்.

ஆசிய துணைக்கண்டத்தின் பிரபல 'கண்ஒளி சித்தர்'
அரிமா. டாக்டர் **B. பரமசிவம்,** R.S.M.P.
(தமிழக அரசு பதிவு எண். 165) **கோமதி கண் மருத்துவமனை,**
3, ஆனந்தவள்ளி கோயில் தென்புறம், மானாமதுரை - 630 606.
போன்: (954574) 268284, கைப்பேசி: 9943579917.

சோபாவைக் காட்டிவிட்டு எதிரே இருந்த ஒரு நாற்காலிக்குத் தன்னைக் கொடுத்தாள்.

"இன்ஸ்பெக்டர்...எனக்கு வேண்டாதவங்க யாரோ இப்படி விளையாடறாங்கன்னு நினைக்கிறேன்..."

"உங்களுக்கு வேண்டாதவங்க இந்த ஃபீல்ட்ல யார்ன்னு சொல்ல முடியுமா...?"

"யாரைன்னு சொல்ல முடியும் இன்ஸ்பெக்டர்? இந்த சினிஃபீல்ட் போட்டியும் பொறாமையும் நிறைஞ்சஒண்ணு. முகத்துக்கு நேரா சிரிச்சு முதுகுக்குப் பின்னாடி கத்தியை தூக்கற கும்பல் இந்த ஃபீல்ட்ல இருக்கு..."

"உங்க குளியலறை எங்கே இருக்கு மேடம்...?"

"என்னைச் சந்தேகப்படிறீங்களா?"

"நோ... நோ மேடம்... உங்களுக்கு தெரியாமே யாராவது அந்தக் குளியலறையில்

ஏதாவது பண்ணியிருக்கலாமே...? எதுக்கும் ஒரு தடவை பார்த்துடறது பெட்டர் இல்லையா...?"

"இட்ஸ் ஓ.கே... நீங்க பாக்க விரும்பறதைப் பத்தி எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. வாங்க..."

நித்யகலா எழுந்து தன்னுடைய அறையை நோக்கி நடக்க சார்லஸ் பின் தொடர்ந்தார்.

பங்களா அரைகுறை வெளிச்சத்தில் ஹோவென்று பரந்து கிடக்க ஹாலின் மையத்திலிருந்து இரண்டு பக்கமும் பிரிந்து போன மாடிப்படிகளில் வலது பக்கமாய் ஏறி மாடி வராந்தாவின் உச்சிக்கு வந்து வராந்தாவின் துவக்கத்திலேயே இருந்த அறையைக் காட்டினாள்.

"இன்ஸ்பெக்டர்... இதுதான் என்னோட பெட்ரூம்... உள்ளேயே பாத்ரூம் அட்டாச்ட். நான் இங்கேயே நிக்கறேன். நீங்க போய் குளியலறைக்குள்ளே பார்த்துட்டுவாங்க..."

சார்லஸ் தயங்க - நித்யகலா புன்னகைத்தாள், "ம்... உள்ளே போய் பார்த்துவிட்டு வாங்க இன்ஸ்பெக்டர். மொதல்ல உங்க சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக்கிறதுதான் முக்கியம்..."

சார்லஸ் மறுபடியும் ஒரு தயக்கப்பார்வை பார்த்துவிட்டு பின் மெதுவாக நடையிட்டு உள்ளே போனார்.

அந்தப் பெரிய அறை இளஞ்சிவப்பு நிற ஜீரோவாட்ஸ் வெளிச்சத்தில் பகட்டாய் தெரிந்தது.

நுரை மெத்தைகள் ததும்பும் இரட்டைக் கட்டில். செல்லமாய் உறுமும் ஏர்க்கண்டிஷனர். வெள்ளை யானைக் குட்டி உட்காந்த



...சஸில் ஒருப்ரிட்ஜ். ஓனிடாவின் டெலிபோன் ...ள். போனஸாய் பக்கத்திலேயே ஒரு ...சல்போன்.

சார்லஸ் பக்கவாட்டில் சுவரோடு சுவராய் அப்பியிருந்த குளியலறைக் கதவை நோக்கிப் போனார்.

கதவை நெருங்கி-

கைப்பிடியைப் பற்றி இழுத்து கதவை விரிய திறந்து வைத்துக் கொண்டு உள்ளே பார்வையைப் போட்டார்.

## 2

**கா**லை ஒன்பது மணி.

ஊருக்கு ஒதுக்குப்புறமாய் கட்டப்பட்டுக் கொண்டிருந்த அந்த ஐந்துமாடி கட்டிடத்துக்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு இறங்கினார் என்ஜினியர் கார்மேகக் கண்ணன்.

கட்டிடத்தின் ஐந்து மாடிகளிலும் சாரங்கள் கட்டியிருக்க தொழிலாளர்கள் அதில் தொற்றிக் கொண்டு பூச்சு வேலை செய்து கொண்டிருக்க - சித்தாள்கள் செங்கல்களை அடுக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சிரித்து பேசியபடி ஒரு பீடியை புகையாய் மாற்றிக் கொண்டிருந்த மேஸ்திரி என்ஜினியரைப் பார்த்ததுமே பீடியை எறிந்துவிட்டு ஓடி வந்தான்.

"அய்யா..."

"என்ன பத்ராச்சலம்... வேலை நடக்குதா?"

"நடக்குதய்யா..."

"செங்கல் எவ்வளவு லோடு வந்தது"

"அஞ்சுலோடு"

"இன்னிக்கு எத்தனை பேர் வேலைக்கு வந்திருக்காங்க?"

"முப்பத்திரண்டு பேர் அய்யா"

"முப்பத்திரண்டு பேர்ல எத்தனை பெண்கள்?"

"பதினாலுங்க..."

"சரி...வா... மேலே போய் பார்க்கலாம்"

இருவரும் சாரங்கள் மேல் ஏறி மேலே போனார்கள். என்ஜினியர் கார்மேகக் கண்ணன் சாரத்தில் லாவகமாய் ஏறியபடி "பத்ராச்சலம்..." என்றார்.

"அய்யா..."

"கட்டிடத்தை இன்னும் ரெண்டு மாசத்துக்குள்ளே முடிச்சாகணும்..."

"முடிச்சுடலாங்கய்யா..."

"நீ இப்ப இப்படி சொல்லிவிட்டு பின்னாடி தலை சொறியக்கூடாது..."

"இல்லீங்கய்யா... கண்டிஷனா முடிச்சுடலாம்"

"ஆட்கள் ஜாஸ்தியா வேணுமா?"

"அதெல்லாம் வேண்டாங்கய்யா. இப்ப வந்துட்டு இருக்கிற ஆட்களே போதும்"

நான்காவது மாடிக்கு வந்தாகள். சிமெண்ட் பூச்சு வேலை மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது.

"கையில் கரண்டியை வெச்சுகிட்டு தடவக் கூடாது. சுவரைத் தொட்டா சும்மா இரும்பு மாதிரி இருக்கணும்."

வேலை செய்து கொண்டிருந்தவர்களிடம் என்ஜினியர் சொல்லிக் கொண்டே ஜன்னல் சதுரத்துக்குப் பக்கத்தில் போய் நின்று வெளியே எட்டிப்பார்த்தார்.



கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் செங்கற்களும், மணலும் அம்பாரமாய் கொட்டி வைத்து இருப்பது தெரிந்தது.

"பத்ராச்சலம்..."

"அய்யா..."

"வாட்ச்மேன் ஒழுங்கா வர்றானா....?"

"ரெண்டுநாளா வரல்லீங்கய்யா"

"ஏன்...?"

"உடம்புக்கு முடியலைன்னு ஆள் மூலமா சொல்லிவிட்டிருந்தான்..."

"அவன் பொய் சொல்றான்னு நினைக்கிறேன்"

"அய்யா..."

"ரெண்டு மூணு தடவை அவனை சாராயக்கடை வாசல்லப் பார்த்தேன். குடிச்சுட்டு போய் எங்கேயாவது விழுந்துகிடப்பான் போலிருக்கு..." பேசிக்கொண்டே போன என்ஜினிரியரின் பார்வை கீழ் தளத்தில் கொட்டி வைத்துஇருந்த மணல் குவியலுக்குப் போக அவர் முகம் மாறியது.

"பத்ராச்சலம்..,"

"என்னங்கய்யா..."

"இப்படி வா..."

வந்தான்.

"கொட்டி வெச்சிருக்கிற மணலோட அடிப்பாகத்தைப் பாரு..."

மேஸ்திரி பார்த்துவிட்டு திடுக்கிட்டான். கண்களில் கலக்கம் படர்ந்தது.

## 3

இன்ஸ்பெக்டர் சார்லஸ் குளியலறைக்குள் நுழைந்து உள்ளே எட்டிப் பார்த்தார்.

ஒரு பெரிய பாத்டப் படகு மாதிரி தெரிய அதற்கு உள்ளே நிரப்பப்பட்டிருந்த தண்ணீ தெளிவாய் சுத்தமாய் இருந்தது. குளியலறை சுவர் பூராவும் இட்டாலியன் டைல்ஸ் ஒட்டிக் கொண்டு பளபளத்தன.

சார்லஸ் பார்வையைச் சுழற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நித்யகலா உள்ளே வந்தாள்.

"என்ன இன்ஸ்பெக்டர்... பாத் டப்புக் குள்ளே ரத்தக்கறையும் மனித விரல்களும் இருந்ததா...?"

"ஸாரி மேடம்... ராத்திரி நேரத்துல வந்து உங்களை தேவையில்லாம தொந்தரவு படுத்திட்டதை நினைக்கும் போது மனசுக்கு கஷ்டமாயிருக்கு..."

"ஸோ வாட் இன்ஸ்பெக்டர். உங்க ட்யூட்டியை நீங்க பண்ணியிருக்கீங்க. ஐ மஸ்ட் தேங்க் யூ..."

இருவரும் குளியலறையைவிட்டு வெளியே வந்தார்கள்.

"மேடம்... இந்த வீட்ல நீங்க மட்டும்தான் தனியா இருக்கீங்களா...?"

"ஆமா..."

"உங்க பேரண்ட்ஸ்...?"

"அவங்க ஆந்திரா ராஜமுந்திரியில் இருக் காங்க. விவசாயக் குடும்பம். நான் சினிமாவில் நடிக்கவந்தது அவங்களுக்கு பிடிக்கலை. நான் இங்கே பேரும் புகழுமா இவ்வளவு வசதியோடு இருந்தாலும் இந்தப் பக்கம் எட்டிக்கூட பார்க்க மாட்டாங்க. மாமா என்கிற தூரத்து உறவில் ஒருத்தர் என்னோட கால்ஷீட் விவகாரங்களை பார்த்துகிட்டிருந்தார். பண விஷயத்தில் அவர் கை கொஞ்சம் சுத்தம்



இல்லாமல் போகவே அவரை வெளியே அனுப்பிட்டேன். மத்தபடி இந்த வீட்ல வேலைக்காரி, சமையல்காரன், வாட்ச்மேன் மூன்று பேர் மட்டும் தான்."

"வேலைக்காரியும் சமையல்காரனும் இங்கேயே ஹால்ட் பண்ணிக்குவாங்களா... இல்ல ராத்திரி நேரங்கள்ல வீட்டுக்குப் போயிடுவாங்களா...?"

"இங்கேயேத்தான் ஹால்ட் பண்ணிக்கு வாங்க" நித்யகலா சொல்லிக் கொண்டிருக் கும்போதே அறை வாசலில் வேலைக்காரி யும் தோளில் போட்ட துண்டோடு சமையல் காரனும் பார்வைக்குக் கிடைத்தார்கள்.

நித்யகலா சொன்னாள்.

"இவங்கதான்..."

சார்லஸ் அந்த இரண்டு பேரையும் ஒரு பொதுப்பார்வை பார்த்துவிட்டு மறுபடியும் நித்யகலாவை ஏறிட்டார்.

"இட்ஸ் ஓகே... மேடம்... நான் கிளம்ப றேன். ஓங்க வாய்ஸ்ல பேசின அந்த போன் கால் யார்ங்கிறதை கண்டுபிடிக்க இந்த நிமிஷத்திலிருந்தே முயற்சி எடுத்துக்கறேன். பை...த...பை மாமா என்கிற உறவில் உங்களோட கால்ஷீட் விவகாரங்களை கவனிச்சிட்டிருந்தவர் பேர் என்ன...?"

"துரையப்பன்..."

"இவர் இப்போ எங்கேயிருக்கார்ன்னு தெரியுமா...?"

"கோபாலபுரத்துல தென்றல் லாட்ஜ்ன்னு ஒரு லாட்ஜ். அந்த லாட்ஜ்ல ரூம் எடுத்து தங்கியிருக்கிறதா கேள்விப்பட்டேன். அது உண்மையா, பொய்யான்னு கூட எனக்குத் தெரியாது..."

"நோ... ப்ராப்ளம்... நாங்க என்கொய் பண்ணிக்கறோம்..." சார்லஸ் நித்யகலாவிட விடைபெற்றுக்கொண்டு பங்களாவைவிட்டு வெளியேவந்தார். போர்டிகோவில்நின்றிருந் ஜீப்புக்குள் ஏறி உட்கார அது கனைத்துவிட்டு புறப்பட்டது.

கேட்டைத் தாண்டும்போது வாட்ச்மேன் வேகவேகமாய் சார்லஸ்ஸுக்கு பக்கத்தில் வந்தான். குரலைத் தாழ்த்திக் கொண்டு கிசுகிசுத்தான்.

"அய்யா..."

ஜீப் நின்றது.

"என்ன...?"

"அய்யா... உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். நாளைக்குக் காலை யில் ஏழுமணிக்கு ட்யூட்டி முடிஞ்சு வீட்டுக்கு போகும்போது ஸ்டேஷனுக்கு வர்றேன்"

"முக்கியமான விஷயமா...? எதைப்பத்தி?"

"அய்யா... இப்ப எதுவும் வேண்டாம். நாளைக்கு காலையில் ஏழு மணிக்கு நான் வர்றேன். ஒரு இருபது நிமிஷநேரம் உட்கார்ந்து பேசவேண்டிய விஷயம் அது. நான் வர்றது யார்க்கும் தெரிய வேண்டாம்."

"உம் பேர் என்ன...?"

"வேலுச்சாமிங்க..."

"உனக்கு வீடு எங்கே...?"

"வண்ணாரப்பேட்டையில் ரெண்டாவது தெருவுங்க"

"சரி... நாளைக்குக் காலையில் ஏழு மணிக் கெல்லாம் நீ ஸ்டேஷன்ல இருக்கணும்..."

"இருப்பேன்ய்யா"

ஜீப் புறப்பட்டது.



வேகம் பிடித்து - ரோட்டுக்கு வந்ததும் ட்ரைவர் கேட்டார்.

"ஸார்... ஸ்டேஷனுக்குத்தானே...?"

"இல்ல... கோபாலபுரம். கோபாலபுரத்துல தென்றல் லாட்ஜ்னு ஒரு லாட்ஜ் இருக்காம். உனக்குத் தெரியுமா?"

"தெரியும் ஸார்..."

"அந்த லாட்ஜ்க்கு வண்டியை விடு..."

ஜீப் வேகத்தை அதிகரித்துக் கொண்டு கோபாலபுரத்தை நோக்கி விரைந்தது. சார்லஸ் ஜீப்புக்குள் இருந்த கான்ஸ்டபிளிடம் கேட்டார்.

"நடிகை நித்யகலாவுக்கு இப்போ மார்க்கெட் எப்படியிருக்கு...?"

"அமோகமாக இருக்கு ஸார். மார்க்கெட்ல இன்னிக்கு நெம்பர் ஒன் நித்யகலாதான். தமிழ்நாடு பூராவும் லட்சக்கணக்கான ரசிகர்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர் மன்றங்கள்."

"கேரக்டர் எப்படி...?"

"ரொம்பவும்ஸ்ட்ரெயிட் ஃபார்வேர்ட் ஸார். எவ்வளவுபணம்கொடுத்தாலும்சரிஆபாசமாக கவர்ச்சியா நடிக்க ஒத்துக்கிறதில்லை. பொதுவா நித்யகலாவைப் பத்தி வெளியே நல்ல டாக் இருக்கு ஸார்."

"சினிஃபீல்டைப் பத்தி பத்திரிகைகளில் வர்ற கிசுகிசுவெல்லாம் உண்மைதானா...?"

"பாதி உண்மை ஸார்...'பயாஸ்கோப்'ங்கிற பேர்ல இப்போ ஒரு சினிமா பத்திரிக்கை வந்துட்டிருக்கு ஸார். அதுல வர்ற எல்லா 'கிசுகிசுக்'களும் உண்மையா இருக்கிறதா வெளியே பேசிக்கறாங்க ஸார்..."

"அந்தப் பத்திரிக்கையோட எடிட்டர் பேர் என்ன?"

"உண்மையான பேர் என்னான்னு தெரியாது ஸார். ஆனா பத்திரிகையில் புலிக் கொடியோன்னு போட்டிருந்தது."

"பத்திரிக்கை சென்னையிலிருந்துதானே வருது...?"

"ஆமா ஸார்..."

"அட்ரஸ்...?"

"கோடம்பாக்கம் ஹைரோட்ல யுனைடெட் காலனிக்குள்ளே இருக்கு ஸார்..."

கான்ஸ்டபிள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கோபாலபுரத்துக்குள் ஜீப் நுழைந்து வெறிச்சோடிப் போயிருந்த இரண்டு தெருக்களைச் சுற்றிக்கொண்டு ட்யூப்லைட் வெளிச்சத்தோடு தெரிந்த அந்த லாட்ஜுக்கு முன்பாய் போய் நின்றது.

சார்லஸ் கீழே குதித்து - கான்ஸ்டபிள்களை உள்ளேயே இருக்கும்படி சொல்லி லாட்ஜின் வாசற்படிகளில் ஏறினார். வாசலில் கொலாப்ஸல் கேட் பாதி திறந்த நிலையில் இருக்கையில் வைத்திருந்த லாட்டியால் ஒரு தட்டு தட்டினார். செமி சர்க்கிள் கெளண்டர்க்குப் பக்கத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபடி தூங்கி வழிந்து கொண்டிருந்த அந்த நபர் தூக்கம் அறுபட்டு எழுந்தான். சார்லஸின் போலீஸ் யூனிபார்மைப் பார்த்ததும் வேகவேகமாய் வந்தான். விஷ் செய்தான்.

"ஸார்..."

"இந்த லாட்ஜுக்கு ஓனர் யாரு...?"

"அவர் வெளியூர் போயிருக்கார் ஸார்"

"யார் இங்கே இன்சார்ஜ்...?"

"நான்தான் ஸார்..."



"பேர் என்ன...?"

"சிவானந்தம் ஸார்..."

சார்லஸ் சிலவிநாடி மெளனம் காத்துவிட்டு கேட்டார் "இங்கே துரையப்பன்னு யாராவது ஹால்ட் பண்ணியிருக்காங்களா?"

"ஆமா... ஸார்..."

"ரூம் நெம்பர் என்ன?"

"ரெண்டாவது மாடியில் ரூம் நெம்பர் இருபத்தியாறு ஸார்"

"அவரைப் பார்க்கணுமே..."

"மூணு நாளா அவர் ரூம்ல இல்ல ஸார். ரூம் பூட்டியிருக்கு..."

"துரையப்பன் எத்தனை நாளா இந்த லாட்ஜில் தங்கியிருக்கார்?"

"ஒரு மாசமா..."

"அவரோட நடவடிக்கைகள் எப்படி...?"

"அவர் சினிஃபீல்ட் சம்பந்தப்பட்ட ஆள் ஸார். நினைச்ச நேரம் வருவார்... போவார். இதுவரைக்கும் அவரால எங்களுக்கு எந்த ஒரு பிரச்னையும் வந்தது இல்லை."

"தண்ணி போடுவாரா...?"

"பழக்கம் இருக்கு... சாப்ட்டுட்டு படுத்துக்குவார்... சத்தம் வெளியே வராது..."

"பொம்பளைங்க விஷயம்...?"

"அதெல்லாம் இந்த லாட்ஜ்ல கிடையாது ஸார்..."

"என்கிட்ட பொய் வேண்டாம். உண்மையைச் சொல்லு..."

"நான் உண்மையைத்தான் ஸார் சொல்றேன். இந்த லாட்ஜ்ல பொம்பளைங்க விஷயம் கிடையாது ஸார்."

"சரி... துரையப்பனோட ரூமுக்கு டூப்ளிகேட் சாவி இருக்கா...?"

"இல்ல சார்... அவரோட ரூமை அவர் தன் சொந்த பூட்டலா பூட்டிகிட்டு போயிடுவார்."

"அந்தரூமைஒப்பன்பண்ணிப்பார்க்கணும். மாஸ்டர் கீ-பன்ச் இருக்கா...?"

"இருக்கு ஸார்..."

"எடுத்துகிட்டு வா..."

"அவன் தயங்கினான்."

"என்ன...?"

"ஸார் இந்த ராத்திரி நேரத்துல வந்து அவரோட ரூமை ஓப்பன் பண்ற அளவுக்கு என்ன பிரச்னை ஸார்..."

"அதை உன்கிட்ட ஒண்ணும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கீ-பன்ச்சை எடுத்துகிட்டு வா"

சார்லஸ்ஸின் குரலில் இருந்த கடுமையை உணர்ந்த லாட்ஜ் பேர்வழி பக்கத்தில் இருந்த அறைக்குப் போய் கீ-பன்ச்சோடு வந்தான்.

"வாங்க... ஸார்..."

மாடி வராந்தாக்களில் ஜீரோவாட்ஸ் பல்பு ஒளிர்ந்து இருட்டை விரட்டிக் கொண்டிருக்க சார்லஸ் மாடிப்படிகளில் அவனோடு நடந்து இரண்டாவது மாடியில் இருந்த இருபத்தியாறாம் எண்ணிட்ட அறைக்கு முன்பாய் வந்து நின்றார்.

பூட்டு அவ்வளவு பலமானது அல்ல என்று பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது.

இன்டேலியம் உடம்பாலான லோக்கல் பூட்டு.

"ம்...திற..."

சார்லஸ் சொல்லிவிட்டு சுவர்க்கு சாய்ந்து கொள்ள லாட்ஜ் ஆசாமி கையில் இருந்த சாவிக்



கொத்தை உபயோகித்து அறைக்கதவின் பூட்டைத் திறக்க முயன்றார்.

நான்கைந்து சாவிகள் உபயோகம் செய்த பின் பூட்டு வாயைத் திறந்து கொண்டது.

சார்லஸ் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்.

பத்துக்கு பத்து என்ற அளவிலான அந்த சிறிய அறைக்குள் ஒரு கட்டில், சிறிய சுவர் பீரோ, தண்ணீர் குடிக்க மண்கூஜா... என்று பொருள்கள் தெரிய - சார்லஸ் அந்த அறையை அலச ஆரம்பித்தார்.

முதலில்சுவர்பீரோவைத்திறந்தார்.நிறைய சினிமா வார இதழ்கள் நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தன. பீரோவின் கீழ்த்தட்டில் பாதி, விஸ்கியோடு கோல் கொண்டா பாட்டில் தெரிந்தது. பாட்டிலுக்குப் பக்கத்திலேயே சில மாத்திரை பட்டைகள். அவைகளை எடுத்துப் பார்த்தார்.

எல்லாமே ஆன்டி-அலர்ஜி டேப்லட்ஜ்.

சார்லஜ் கட்டிலுக்குக் கீழே குனிந்து பார்த்துவிட்டு நிமிர்ந்தார். லாட்ஜ் ஆசாமி கதவோரமாய் முகம் இருண்டு போன நிலையில் நின்றிருந்தான்.

"உம் பேர் என்ன சொன்னே...?"

"சிவானந்தம் சார்..."

"இதோ பார் சிவானந்தம்...! துரையப்பன் மூணு நாளா இங்கே இல்லேன்னு சொன்னே. அந்த ஆள் எங்கே போயிருக்கார்னு உனக்கு தெரியும்ன்னு நினைக்கிறேன். தெரிஞ்சா சொல்லிடு. அந்த ஆளை ஒரு கேஸ் விஷயமா சந்தேகப்படறோம்..."

"சத்தியமாக எனக்குத் தெரியாது ஸார்..."

"சரி... அந்த துரையப்பனைத் தேடிகிட்டு இந்த லாட்ஜுக்கு அடிக்கடி யார் வருவாங்க...?"

"அப்படி யாரும் வர்றதில்லை ஸார். எப்பாவது டெலிபோன் மட்டும் வரும்..."

"டெலிபோன் யார் பண்ணுவாங்க?"

"அதுவும் தெரியாது ஸார்... போன்ல பேசற நபர் துரையப்பனைக் கொஞ்சம் கூப்பிட்டு விடுங்கன்னு சொல்வாங்க. நான் இங்கிருந்தே பெல் கொடுத்து அவரை வரவழைப்பேன்."

சார்லஸ் மேற்கொண்டு கேள்வியைக் கேட்கும் முன் அவருடைய பார்வை அறையின் மூலையில் ஒரு ஸ்டூலின் மேல் உட்கார்ந்திருந்த மண்கூஜாவின் மேல் நிலைத்தது. கூஜாவின் மூடி லேசாய் திறந்திருக்க அதற்குள்ளே நான்கைந்து ஈக்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருந்தன.

சார்லஜ் தன் முகத்தில் ஒரு பெரிய கேள்விக்குறியை ஒட்ட வைத்துக் கொண்டு மண் கூஜாவை நோக்கி நடைபோட்டார்.

## 4

மேஸ்திரி குவித்து வைக்கப்பட்டிருந்த மணலின் அடிப்புறத்தை பார்த்துவிட்டு என்ஜினியர் கார்மேகக் கண்ணனை கலவரமாய் பார்த்தான்.

"அய்யா... மணலுக்குக் கீழேயிருந்து ஒரு கால் மட்டும் தெரியுது."

"விஷயத்தை யார்கிட்டேயும் சொல்லாமே மொதல்ல கீழே வா... அது என்னான்னு பார்த்துடலாம்"

சாரங்களில் கால்பதித்து வேகவேகமாய் கீழே வந்தார்கள். மணல் குவித்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்குப் போய் மணலின் அடிப்பகுதியை குனிந்து பார்க்க கண்களில்



கலவரம் வெடித்தது. மேஸ்திரி பத்ராச்சலம் சுற்றும் முற்றும் பீதியாய் பார்த்துவிட்டு என்ஜினியரிடம் சொன்னார்.

"அய்யா... உள்ளே யாரோ மாட்டிகிட்டு உயிரைவிட்டிருக்காங்க..."

"இங்கே வேலை செய்ய ஆளா... இல்லை வேற யாராவதா...?"

"மண்ணை எடுத்து பார்த்தாதாங்க தெரியும்"

"சரி... மண்ணை எடுத்துபோடச் சொல்லு. கட்டிடம் முடியப் போற நிலையில் புதுசா இப்படியொரு பிரச்னை...?"

மேஸ்திரி இரண்டு பேரைக் கூப்பிட்டு மண்ணை எடுத்துப்போடச் சொல்ல அவர்கள் செயல்பட்டார்கள். மண்வெட்டியால் மணல் பறிக்கப்பட்டு இரும்புச் சட்டிகளில் நிரம்பி சித்தாள்கள் மூலம் கட்டிடத்தின் வேறு பகுதிக்கு கடத்தப்பட்ட மணல் குவியலுக்கு கீழே சிக்கியிருந்த உடல் கொஞ்சம் கொஞ்சமாய் பார்வைக்குப் புலப்பட ஆரம்பித்தது.

அது ஒரு ஆணின் உடல்.

முகம் சிதைக்கப்பட்டிருந்தது. உறைந்து போன ரத்தத்தில் மணல் ஒட்டியிருந்தது.

"பத்ராச்சலம்! ஆள் யார்ன்னு தெரியுதா?"

"தெரியல்லீங்கய்யா...! மூஞ்சியை ரத்தக் களியா கொத்தியிருக்காங்க. அதுல மண்ணு வேற ஒட்டியிருக்கு."

"மூஞ்சி மேல ஒரு பக்கெட் தண்ணி ஊத்திப்பாரு..."

மேஸ்திரி பக்கத்து ட்ரம்மில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த தண்ணீரில் ஒரு பக்கெட்டை மொண்டு பாடியின் முகத்தில் ஊற்ற மணல் கரைந்து போய் முகம் பார்வைக்குக் கிடைத்தது.

மழித்த தலை, உருக்குலைந்த முகம். கண்கள் இருக்கவேண்டிய இடத்தில் இரண்டு குழிகள் மட்டும் தெரிய - அதில் மணல் நிரம்பியிருந்தது.

மேஸ்திரி வியர்வை வழியும் முகத்தோடு என்ஜினியரை ஏறிட்டான்.

"இது யார்ன்னு தெரியல்லீங்கய்யா"

"சரி...! பாடிக்குப் பக்கத்துல யாரையும் போகாமே பார்த்துக்க... நான் போலீஸுக்கு தகவல் சொல்லிட்டு வர்றேன்"

"சரிங்கய்யா..." தலையாட்டிய மேஸ்திரியின் பார்வை மறுபடியும் பயத்தோடு அந்த சிதைந்த முகத்தின் மேல் விழுந்தது.

'யார் இவன்...?'

## 5

இன்ஸ்பெக்டர் சார்லஸ் அந்த மண்கூஜாவை நெருங்கி மூடப்படாத மேல்மூடியை எடுத்துவிட்டு உள்ளே பார்வையைப் போட்டார்.

தண்ணீர் இராத மண்கூஜா அது. உள்ளே ஒரு பழைய துணி அடைசலாய் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

சார்லஸ் சிவானந்தத்தைத் திரும்பிப் பார்த்து "இங்கே வாய்யா" என்றார்.

அவன் தயங்கிக் கொண்டே பக்கத்தில் வந்தான்.

"ஸ... ஸார்..."

"இந்த கூஜாவுக்குள்ளே என்ன இருக்குதுன்னு பாரு..."

அவன் பார்த்துவிட்டு மகம் மாற சார்லஸ் கேட்டார். "இது என்ன துணி...?"



"தெ... தெரியல்ல... ஸார்..."

"எடுத்துப்பாரு..."

அவன் ஒரு பயப்பார்வையோடு கூஜாவுக்குள் கையை விட்டு உள்ளே சுருட்டி வைத்திருந்த துணிப்பந்தை எடுத்து மெல்லப் பார்த்தான்.

துணி முழுக்க திட்டுத்திட்டாய் உறைந்து போன ரத்தம். துணியின் மடிப்புக்களை இன்னமும் பிரித்துப் பார்க்க உள்ளே ரத்தக்கறையாடு உறைந்துபோன பேனாக்கத்தி மடக்கி வைக்கப்பட்டிருந்தது.

சார்லஸ் ஒரு கேலிப் புன்னகையோடு சிவானந்தத்தின் முதுகைத் தட்டினார்.

"என்னய்யா இது! தண்ணி கூஜாவா... இல்லை ரத்தக் கூஜாவா...?"

"ஸார்... எனக்கு ஒண்ணுமே தெரியாது ஸார்... அந்த துரையப்பன்கிட்ட ஏதோ தப்பு இருக்குன்னு இப்பத்தான் ஸார் தெரியுது..."

"மூணுநாளா ஆளைக்காணோம். தண்ணி இருக்க வேண்டிய மண்கூஜாவுக்குள்ளே ரத்தக்கறை படிஞ்ச துணியும் கத்தியும் இருக்கு. நீ இந்த லாட்ஜ்க்கு இன்சார்ஜ் எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சான்னா என்னய்யா அர்த்தம்?"

"சத்தியமா எனக்கு ஒண்ணும் தெரியாது ஸார். இந்த லாட்ஜ்ல என்னோட முக்கியமான வேலையை ரூம் கேட்டு வர்றவங்களுக்கு ரூம் புக் பண்றதும் அவங்க காலி பண்ணிட்டு போகும்போது பத்தை கலெக்ட் பண்றதுதான்."

"இங்கே ரூம் சர்வீஸுக்கு பாய்னு இருக்காங்களா?"

"இருக்காங்க ஸார்..."

"இந்த ரூமுக்கு யாரு...?"

"மொய்தீன்னு ஒரு பையன் ஸார். லாட்ஜ்க்கு பின்பக்கம் இருக்கற ஷெல்டர் ஷெட்ல தூங்கிட்டிருப்பான் ஸார்."

"போய் கூட்டிகிட்டு வா..."

சிவானந்தம் வியர்த்து வழிந்து அறையை விட்டுப் போக - சார்லஸ் அந்த ரத்தக் கறைத் துணியையும் கத்தியையும் பார்சல் செய்து வைக்கிறதுக்காக அறையில் பிளாஸ்டிக் கவர் ஏதாவது கிடைக்குமா என்று பார்வையை அறை பூராவும் துரத்திப் பார்த்தார்.

கிடைக்காமல் போகவே -

மறுபடியும் சுவர் அலமாரியைத் திறந்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த சினிமா வார இதழ்களுக்கு நடுவில் தேடினார். இரண்டாவது தட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த வார இதழ்களுக்குப் பின்னால் இளஞ்சிவப்பில் ஒரு ப்ளாஸ்டிக் பை திணித்த மாதிரி தெரிய - சார்லஸ் அந்தப் புத்தகக்கட்டை கீழே இறக்கி வைத்துவிட்டு - பிளாஸ்டிக் பையை கிழித்த விநாடி -

பக்கத்தில் இருந்த புத்தகங்கள் பாலன்ஸ் இழந்து சரிந்தன.

'தபதப'வென்று சரிந்த புத்தகங்களுக்கு மத்தியில் சில போட்டோக்களும் பளபளப்பாய் உதிர்ந்து - அதில் ஒன்று சார்லஸ்ஸின் பூட்ஸ் காலை முத்தமிட்டது.

குனிந்து அந்த போட்டோவை எடுத்தார்.

பார்வை போட்டோவுக்கு போக - சார்லஸ் ஸின் கண் நரம்புகள் சுளீரென்று மடங்கின.

போட்டோவில் நித்யகலா சிரித்தார்.

உடம்பில் துணியில்லாமல் - ஒரு இளைஞனைக் கட்டிப்பிடித்தப்படி.



# 6

கட்டிட வேலைகள் நிறுத்தப்பட்டு - ஆட்கள் வெளியேற்றப்பட்டு - போலீஸ் இப்போது குவிந்து இருந்தார்கள்.

அஸிஸ்டெண்ட் போலீஸ்கமிஷனர் பசுபதி ஸ்தலத்திற்கு விஜயம் செய்து பாடியைப் பார்த்த பிறகு என்ஜினியர் கார்மேகக் கண்ணனிடம் வந்தார்.

"இந்த பில்டிங்கை யார்க்காக கன்ஸ்ட்ரக்ட் பண்ணிட்டிருக்கீங்க...?"

"சௌகார் பேட்டையில் இருக்கிற ஒரு பார்ட்டிக்கு ஸார். பார்ட்டியோட பேர் குப்தா மெஹ்டே."

"இப்படியொரு சம்பவம் நடந்தது குறித்து அவர்க்கு தகவல் கொடுத்துட்டீங்களா...?"

"கொடுத்துட்டேன். வந்துட்டிருக்கார். ஹி ஈஸ்... ஆன்... த... வே..."

"என்ன பர்ப்பஸ்க்காக இந்த கன்ஸ்ட் ரக்ஷன்?"

"அப்பார்ட்மெண்ட்ஸ் ப்யூர்லி ரெஸிடென்ஸியல்..."

"இந்த கன்ஸ்ட்ரக்ஷன் சம்பந்தமா கோர்ட்ல ஏதாவது கேஸ் இருந்ததா...?"

"அப்படி எதுவும் இருந்த மாதிரி தெரியலை ஸார்."

"எனி லேபர் ப்ராப்ளம்...?"

"கிடையவே கிடையாது ஸார். இந்த கட்டிடத்துக்கு பூஜை போட்ட நாளிலிருந்து இந்த நிமிஷம் வரைக்கும் எந்த பிரச்னையும் வந்ததில்லை ஸார்..."

"இறந்தது உங்க லேபர் கிடையாதுன்னு சொல்றீங்க... ஆர்... யூ... ஷ்யூர்...?"

"ஷ்யூர் ஸார்... லேபர் லிஸ்டில் நாங்க செக் பண்ணிப் பார்த்துட்டோம்..."

கார்மேகக் கண்ணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இன்ஸ்பெக்டர் ஒருவர் பக்கத்தில் வந்து விறைப்பாய் நின்றார்.

"எஸ்..."

"ஸார்... டாக்டர் கனி ஸ்பாட் போஸ்ட் மார்ட்டத்தை முடிச்சுட்டார். அவர் உங்களுக்காக காத்திட்டிருக்கார்."

"தட்ஸ் குட்..." அஸிஸ்டண்ட் கமிஷனர் பசுபதி இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து நடந்தார்.

டெட்பாடி பார்மலினில் ஊற வைக்கப்பட்டு ஒரு ஓமாய் கிடத்தப்பட்டிருக்க - டாக்டர் கனி கையில் வைத்திருந்த அரசாங்க சாணி கலர் போஸ்ட் மார்ட்டம் தாள்களோடு பசுபதியை எதிர்கொண்டார்.

"ஐ...டிட்...மை...ஜாப்..."

"எனி... யூஸ்ஃபுல் பர்டிகுலர்ஸ் டாக்டர்...?"

கனி ரிப்போர்ட்டைப் பார்த்து படிக்க ஆரம்பித்தார்.

"இது... ஒரு ப்ருடல் மர்டர். நோ டவுட். கிட்டத்தட்ட உடம்பின் எல்லா புாகங்களிலும் கத்திக் குத்து விழுந்துள்ளது. உடம்பிலிருந்து ரத்தம் பூராவும் வெளியேறிய பிறகு முகத்தை சிதைச்சிருக்காங்க..."

"இறந்தவனின் ஏஜ் க்ரூப் என்ன டாக்டர்?"

"முப்பதில் இருந்து நாற்பதுக்குள்"

"எனி... ஸ்பெஷல் நோட்...?"

"இப்போதைக்கு இல்லை. பாடியோட இன்டர்னல் பார்ட்ஸை கொஞ்சம் கொஞ்சமா கட் பண்ணி பாலிதீன் பேக்ஸ்ல கலெக்ட்



பண்ணியிருக்கேன். அதை ஃபாரன்ஸிக்குக்கு அனுப்பி ரிப்போர்ட் வாங்கினால் யூ மே... கெட்..."

"தேங்க்... யூ... டாக்டர்..." கனியிடம் கை குலுக்கி விட்டு பசுபதி திரும்ப என்ஜினியர் கார்மேகக் கண்ணன் குள்ளமாய் சிவப்பாய் இருந்த ஒரு மனிதரைக் காட்டி அறிமுகப்படுத்தினார்.

"இவர்தான்... மிஸ்டர் குப்தாமெஹ்டே! இந்த பில்டிங் ஓனர்..."

பசுபதி அவரை ஏறிட்டார்.

"மிஸ்டர் குப்தா... உங்க பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் நடந்துகிட்டு இருக்கிற இந்த சமயத்துல இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கு. இதைப் பத்தி நீங்க என்ன சொல்ல விரும்பறீங்க...?"

குப்தா தன் கையில் இருந்த கர்ச்சீப்பால் முன் வழுக்கையில் துளிர்ந்து இருந்த வியர்வையை ஒற்றிக் கொண்டே சொன்னார்.

"எனக்கு எதுவுமே புரியலை ஏ.ஸி. ஸார். என்னோட பிசினஸ் லைன்ல எனக்கு எதிரிகள் யாரும் கிடையாது. ஏன்னா என்னோட பிசினஸ் வட்டி லேவாதேவி பண்றது. இது ப்ராடக்ட் பிசினஸோ மார்க்கெட்டிங் பிசினஸோ கிடையாது."

"பாடியைப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன்..."

"யார்ன்னு ஐடென்டிஃபை பண்ண முடியுதா...?"

"முடியலை ஏ.ஸி. ஸார்..."

"நீங்க கொஞ்சம் ஸ்ட்ரெயின் பண்ணினா அது யார்ங்கிறதை கண்டுபிடிச்சுடலாம். ஏன்னா உங்க பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன்

ஸ்பார்ட்ல பாடி கிடந்திருக்கு. ஸோ கொலை யானது உங்க ஃப்ரண்ட்ஸ் சர்க்கிளிலேயோ இல்லைன்னா உங்க ரிலேடிவ் சர்க்கிளிலேயோத்தான் இருக்கணும்."

"ஸார் ஸார்... ஆ யாம் ஹெல்ப்லெஸ்..."

பசுபதி மறுபடியும் பேச முயன்ற போது சீன் ஆஃப் க்ரைம் பார்த்துக் கொண்டிருந்த ஃபாரன்ஸிக் ஆபீஸர் வேகவேகமாய் பக்கத்தில் வந்தார்.

"ஸார்..."

"எஸ்..."

"ஸார்... பாடி மேல் இருந்த மணலை அலசி பார்த்தப்ப இது கிடைச்சுது."

ஏ.ஸி. வாங்கிப் பார்த்தார்.

அவருடைய வலதுபக்க புருவம் மட்டும் வியப்பில் மேலேறியது.

## 7

இன்ஸ்பெக்டர் சார்லஸ் அந்த போட்டோவைப் பார்த்து அயர்ந்து போனார்.

நித்யகலா உடம்பில் துணி இல்லாமல் ஒரு இளைஞனைக் கட்டிப்பிடித்து சிரிக்க அந்த இளைஞன் தலையை குனிந்து சிரித்துக் கொண்டிருந்தான். அவன் உடம்பில் ஜட்டி மட்டும் ஒட்டியிருந்தது. கழுத்தில் புலிநகச் செயின்.

சார்லஸ் அவசர அவசரமாய் கீழே கிடந்த மற்ற போட்டோக்களை எடுத்து ஒவ்வொன்றாய்ப் பார்த்தார்.

மொத்தம் எட்டு போட்டோக்கள்.

எல்லா போட்டோக்களிலும் நித்யகலா பிறந்த மேனியாய் யாராவது ஒரு இளைஞ



னோடு உட்கார்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும் நின்று கொண்டு சிரித்தாள்.

போட்டோக்களை ஒரு ப்ளாஸ்டிக் கவரில் போட்டு பத்திரப்படுத்திக் கொண்ட சார்லஸ் மறுபடியும் வேறு ஏதாவது வார இதழ்களைக் கீழே எடுத்து வைத்து வேறு ஏதாவது போட்டோக்கள் கிடைக்குமா என்று தேடிப் பார்த்தார்.

கிடைக்கவில்லை.

மாடி வராந்தாவில் நடைச் சத்தம் கேட்டது. திரும்பினார்.

சிவானந்தம் ஒரு ரூம் பாயோடு நின்றிருந்தார்.

"இவன்தான் ஸார் இந்த மாடிக்கு ரூம் சர்வீஸ் பாய்."

சார்லஸ் கையசைத்தார்.

"வாடா இங்கே..."

பையன் கண்களில் தூக்கக் கலக்கம் ஒட்டியிருக்க மிரண்டு மிரண்டு பக்கத்தில் வந்தான்.

"உம் பேர் என்ன...?"

"மொய்தீன் ஸார்..."

"இந்த ரூம்ல தங்கியிருந்த துரையப்பன் ரூமைப் பூட்டி கிட்டு எங்கே போயிருக்கார்னு தெரியுமா?"

"தெரியாது ஸார்..."

"கடைசியா நீ என்னிக்கு பார்த்தே...?"

"இன்னிக்கு சனிக்கிழமை ஸார். நான் அந்த ஆளை கடைசியா பார்த்தது புதன்கிழமை ராத்திரி பத்து மணிக்கு ஸார்..."

"அவர் வெளியே போகும்போது பார்த்தியா இல்ல ரூம்ல இருக்கும்போது பார்த்தியா?"

"ரூம்ல இருக்கும் போது..."

"அவர் கூட வேற யாராவது இருந்தாங்களா?"

"இல்ல அவர் மட்டும்தான் இருந்தார். நான் கூட படிக்கிறதுக்காக அவர்கிட்ட ஒரு சினமா புஸ்தகம் கேட்டேன். ஒரு புஸ்தகத்தை எடுத்து கொடுத்தார்."

"சரி... அவர்க்கு கீழே போன்கால் ஏதாவது வந்தா... நீ தான் வந்து சொல்லுவியா...?"

"ஆமா... ஸார்..."

"அவர் போன்ல பேசும்போது எப்பவாவது என்ன பேசறார்ன்னு கேட்டதுண்டா...?"

"இல்ல ஸார்... அவர் போன்ல பேசும்போது ஏதோ ரகசியம் பேசற மாதிரி மெதுவா பேசுவார். நம்ம காதுல எதுவுமே விழாது..."

சார்லஸ் மண் கூஜாவைக் காட்டினார்.

"இந் கூஜாவில் நீ தண்ணி நிரப்பி வெக்கிறதே இல்லையா...?"

"அதுல தண்ணி ஊத்தி வைக்க முடியாது ஸார்"

"ஏன்...?"

"கூஜாவுக்கு கீழே சின்னதா ஒரு ஓட்டை இருக்குஸார்...தண்ணிஊத்திவெச்சாசொட்டு சொட்டா வெளியே வந்துட்டிருக்கும்... அதனால் துரையப்பன் இதுல தண்ணீர் ஊத்தி வெக்க வேண்டாம்ன்னு சொல்லிட்டார். அவர் தண்ணி வேணும்ன்னு கேட்டா ஜக்ல கொண்டு போய் கொடுத்துடுவேன்."

சிவானந்தம் குறுக்கிட்டு ரூம் பாயிடம் கேட்டார்.

"இது எத்தனை நாளா?"

"பத்து நாளா..."



விரைவில் புதுப்பொலிவுடன்

# ஆனந்த ஜோக்ஸ்

நகைச்சுவை மாத இதழ்



❖ நீங்கள் சிரிக்க மட்டும்...

❖ விதவிதமான கார்ட்டூன்களுடன்...

❖ பல நகைச்சுவை துணுக்குகளுடன்...

❖ அதி விரைவில்...

படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி

ஆனந்த ஜோக்ஸ்

13, தீத்தாரப்பன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

"ஆனா என்கிட்ட ஏன்டா சொல்லலை...?"

பையன் தலையைச் சொறிந்தான்.

"மறந்துட்டேன் ஸார்..."

சார்லஸ் சிவானந்தத்தை ஏறிட்டார்.

"அந்த துரையப்பன் எப்பவாவது கீழே வந்து யார்க்காவது போன் பண்ணியிருக்காரா...?"

"இல்ல ஸார்..."

சார்லஸ் எரிச்சல்பட்டார்.

"என்னய்யா இது... எதைக் கேட்டாலும் தெரியாது இல்லன்னு சொல்லிகிட்டு...? ஹோட்டலுக்கு இன்சார்ஜ் பொறுப்பு நீதானே...? மாசக்கணக்கா தங்கியிருக்கிற ஒரு கஸ்டமரைப் பத்தி அவரோட நடவடிக்கைகளைப் பத்தி தெரிஞ்சு வெச்சுக்க வேண்டாமா...?"

"ஸார்...! அவர் மேல எனக்கு ஒரு சின்ன சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும் அவரைக் கண்காணிக்க ஸ்டெப்ஸ் எடுத்திருப்பேன். அவர் வர்றதும் தெரியாது போறதும் தெரியாம இருந்ததினால எப்படியோ மிஸ் பண்ணிட்டேன்... சிவானந்தம் மன்னிப்பு கேட்கும் தொனியில் சொல்லி கொண்டிருக்கும் போதே மொய்தீன் அவசரக் குரலில் குறுக்கிட்டான்."

"ஸ... ஸார்... ஸார்"

சார்லஸ் திரும்பினார்.

"என்னடா...?"

"அந்த துரையப்பன் என்கிட்ட ஒரு சினிமா புத்தகம் கொடுத்ததா சொன்னேனே...?"

"ஆமா..."

"அந்த புஸ்தகத்தோடே பின்பக்க அட்டையில் டெலிபோன் நெம்பர் மாதிரி ஏதோ ஒரு நெபர் எழுதியிருந்தது ஸார்."



சார்லஸ் பிரகாசமானார்.

"போய் புத்தகத்தை கொண்டா பார்க்கலாம்."

பையன் ஓடினான்.

இரண்டு நிமிஷத்தில் திரும்பி வந்தான்.

கையில் ஒரு புத்தகம். ஜூனியர் சினிமா என்று புத்தக டைட்டில் சொல்ல கவர்ச்சி நடிகையொருத்தி அட்டைப்படத்தில் தொப்புளைக் காட்டிக் கொண்டு சிரித்தாள்.

"நெம்பர் எங்கே...?"

"பின்பக்கம் பாருங்க ஸார்..."

பார்த்தார்.

28914457 என்ற எண்கள் அட்டைப்படத்தின்பின்பக்கத்தில்பால்பாயிண்ட்பேனாவால் கிறுக்கலாய் எழுதப்பட்டிருந்தது.

புத்தகத்தின் இஷ்யூ தேதியைப் பார்த்தார்.

சென்ற மாதத்தில் நான்காம் தேதி வெளியான புத்தகம் அது.

சமீபத்திய டெலிபோன் நெம்பர்தான்.

"சிவானந்தம்..."

"ஸார்..."

"இந்த ரூமுக்கு வேற பூட்டைப் போட்டு பூட்டி சாவியைக் கொண்டு வந்து என் கையில் கொடுத்துடு. இந்த அறையை இன்னும் கிளறிப் பார்க்க வேண்டியிருக்கு. நான் கீழே போய் டெலிபோன் பண்ணிட்டிருக்கேன்..."

சிவானந்தம் தலையாட்ட சார்லஸ் அந்த புத்தகத்தோடு கீழே போனார்.

கீழே காத்திருந்த கான்ஸ்டபிள்கள் ஏதோ பேச வர அவர்களை சைகையால் கையமர்த்திவிட்டு டெலிபோனை நோக்கிப் போய் ரிஸீவரை எடுத்துக் கொண்டார்.

ஜூனியர் சினிமா புத்தகத்தின் பின்பக்க அட்டையில் எழுதியிருந்த எண்களை டயல் நெம்பர்களில் ஒற்றி எடுத்தார்.

மறுமுனையில் ரிங் போயிற்று...

போயிற்று.

போய்க் கொண்டேயிருந்தது.

ஒரு ஐந்து நிமிஷ நேரம் முயற்சி செய்து பார்த்துவிட்டு டெலிபோன் அஸிஸ்டன்ஸிக்கு தொடர்பு கொண்டார்.

ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"எஸ்..."

"மேடம்... இது போலீஸ் டிபார்ட்மெண்ட்."

சொல்லுங்க ஸார்...

"ஒரு கேஸ் சம்பந்தப்பட்ட என்கொய்ரியில் ஒரு டெலிபோன் நெம்பர் கிடைச்சிருக்கு. அந்த நெம்பர்க்கு டயல் பண்ணிப் பார்த்தேன். ரிங் போயிட்டே இருந்தது. ஸோ... அந்த நெம்பர்க்குரிய நபர் அண்ட் அட்ரஸ் தெரிஞ்சா பரவாயில்லை."

"நெம்பரைச் சொல்லுங்க ஸார்"

"ட்ரீ, எய்ட், நைன், ஒன், டபுள் போர் ஃபைவ் ஸெவன்"

"லைன்ல இருங்க... ஸார்... பார்த்து சொல்றேன்"

சார்லஸ் மோவாயைத் தேய்த்தபடி லைனில் காத்திருந்தார்.

சரியாய் இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அந்தப் பெண்ணின் குரல் கேட்டது.

"ஸார்..."

"சொல்லுங்க மேடம்"

அவள் அந்த டெலிபோன் நெம்பர்க்குரிய அட்ரஸைச் சொல்ல அயர்ந்து போனார் சார்லஸ்.



# 8

அஸிஸ்டண்ட் கமிஷன் பசுபதி கமிஷனரின் அறைக்குள் நுழைந்து சல்யூட் வைக்க - கமிஷனர் ஜீவா பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை மேஜையோரமாய் தள்ளி வைத்துவிட்டு நாற்காலியைக் காட்டினார். நேரம் காலை மணி பதினொன்று.

"உட்கார்ங்க பசுபதி"

அவர் உட்கார்ந்தார்.

கமிஷனர் கேட்டார்.

"செத்தது யார்ங்கிறது எதாவது க்ளூ கிடைச்சதா?"

"சீன் ஆஃப் க்ரைம்ல ஒரே ஒரு க்ளூதான் ஸார் கிடைச்சுது..."

"என்ன க்ளூ..."

பசுபதி தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்தப் பொட்டலத்தை எடுத்து பிரித்து உள்ளே பளபளத்துக் கொண்டிருந்த மெல்லிய கண்ணாடித் தகடு போல் இருந்த அதைதன் ஆட்காட்டிவிரலால் ஒற்றியெடுத்து மேஜை மேல் வைக்க கமிஷனர் கேட்டார்.

"என்ன... இது...?"

"கான்டாக்ட் லென்ஸ் ஸார்"

"இது யாரோடது...?"

"கொலை செய்யப்பட்ட நபரோட கண்கள்ல இந்த கான்டாக்ட் லென்ஸ் பொருத்தப்பட்டிருந்திருக்கலாம் ஸார்."

"இது எங்கிருந்து கிடைச்சுது...?"

"பாடியை மூடியிருந்த மணலை கட்டிட லேபர்ஸ் ரிமூவ் பண்ணி வேற இடத்துல போட்டிருந்தாங்க ஸார். அந்த மணல்ல

தயடம் ஏதாவது கிடைக்கக் கூடும் என்கிற எண்ணத்தில் சீன் அஃப் க்ரைம்ல அந்த மணலைகிளறிப் பார்க்கச் சொன்னேன் ஸார். அதுல கிடைச்சதுதான் இந்த கான்டாக்ட் லென்ஸ்..."

"டாக்டர் கனியோட ஸ்பாட் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் படி டெட்பாடியோட முகம் சிதைக்கப்பட்டிருக்கு. கண்கள் இருக்கவேண்டிய இடத்தில் ரெண்டு குழிகள் மட்டும் இருக்கு இல்லையா...?"

"ஆமா... ஸார்..."

"பாடி அந்த கண்டிஷனில் இருக்கும் போது இந்த கான்டாக்ட் லென்ஸ் இறந்து போன அந்த நபரோடதுதான்னு எப்படி சொல்றீங்க மிஸ்டர் பசுபதி...?"

"அதையும் கன்ஃபர்ம் பண்ணிட்டோம் ஸார்"

"எப்படி...?"

"கான்டாக்ட் லென்ஸ்கைக்குகிடைச்சதுமே எனக்கும் உங்களுக்கு ஏற்பட்ட அதே சந்தேகம் தான் ஸார். லென்ஸை உடனடியா பார்மலினில் ப்ரஸர்வ் பண்ணி ஃபாரன்ஸி லாப்புக்கு கொண்டு போயிட்டேன். ஃபாரன்ஸிக் மணிமாறன் கிட்ட விஷயத்தைச் சொன்னதும் அவர் உடனடியாலென்ஸை ஒரு டிஷ்யூ டெஸ்ட்டுக்கு உட்படுத்தினார். டெஸ்ட் ரிப்போர்டில் லென்ஸின் ஓரப்பகுதி களில் ஒட்டியிருந்த ரத்த அணுக்களும் திசு அணுக்களும் சக்தி வாய்ந்த அல்ட்ரா மைக்ராஸ்கோபில் சிக்கிக் கொள்ள - பாடி யோட கண் பகுதியிலிருந்து கொண்டு போன சதைத் துணுக்களை பாரன்ஸிக் செய்து அந்த ரிப்போர்ட்டை டிஷ்யூ ரிப்போர்ட்டோடு



கம்பேர் செய்து பார்த்து ரெண்டும் ஒரே வகையான ரத்த திசு அணுக்கள்தான்னு மணிமாறன் க்ளீயரா சொல்லிட்டார்..."

"ஃபெண்டாஸ்டிக்" என்று மோவாயைத் தாங்கிக் கொண்டே கமிஷனர் நாற்காலிக்கு நன்றாக சாய்ந்து உட்கார்ந்தபடி கேட்டார்.

"ஒருவிஷயத்தையோசிச்சுப்பார்த்தீங்களா பசுபதி...?"

"என்ன ஸார்...?"

"கொலையாளி பாடியோட முகத்தை சிதைக்கும்போதுகத்திக்குத்திகண்ணிலேயும் விழுந்திருக்கும் இல்லையா?"

"கண்டிப்பா ஸார்..."

"அப்படி குத்தப்படும்போது கண்ணில் பொருத்தப்பட்டிருந்த கான்டாக்ட் லென்ஸ் இப்படி முழுமையா கிடைக்காதே...?"

"ஒரு வேளை போராட்டத்தில் போது - ஐ மீன் செத்துப்போன நபர் கொலையாளியோட போராடும் போது கண்ணிலிருந்து இந்த கான்டாக்ட் லென்ஸ் தெளிச்சு மண்ணில் விழுந்து இருக்கலாம் ஸார்..."

"ஸோ...மர்டர் அந்தகட்டிடகன்ஸ்ட்ரக்ஷன் ஸ்பார்ட்லதான் நடந்திருக்கு..."

"மே...பி...ஸார்..."

"பாடியோட கண்டிஷனை வெச்சு டாக்டர் கனி மர்டர் எத்தனை நாளைக்கு முன்னாடி நடந்திருக்கும்ன்னு சொல்றார்?"

"மூணு நாள்..."

"சம்பவம் மூணு நாளைக்கு முன்னாடி நடந்திருக்கும். ஆனா கட்டிடப் பகுதியில் மூணு நாளா வேலையும் நடந்துட்டு இருந் திருக்கு. லேபர்ஸ், மேஸ்திரி யாருமே கவனிக் கலைன்னா அது ஆச்சர்யமாயிருக்கே...?"

"ஸார்...! சம்பவம் ராத்திரி நேரத்துல நடந்திருக்கு வாட்ச் மேன் இப்போ லீவ்ல இருக்கிறதுனால கொலையாளிக்கு அந்த இடம் வசதியா போச்சு. அம்பாரமா குவிச்சு வெச்சிருந்த மணலுக்குள்ளே பாடியை சமாதி பண்ணிட்டுப்போய்ட்டாங்க...கட்டிட வேலை மேல் ரெண்டு மாடியில் நடந்துட்டிருந்ததால் கீழே நடந்திருக்கிற இந்த விபரீதம் யார்க்குமே தெரியாமே போயிடுச்சு"

"இந்த கான்டாக்ட் லென்ஸை மட்டும் வெச்சுகிட்டு இந்த கேஸை எப்படி மூவ் பண்ணப்போறோம் மிஸ்டர் பசுபதி...?"

"ஸார்...! பாரன்ஸிக் மணிமாறன் ஒரு விஷயம் சொன்னார். இந்த கான்டாக்ட் லென்ஸ்ல ஏதோ ஒரு ஸ்பெஷல் எபெக்ட் இருக்கு... இது இம்போர்டட்ட் வஸ்து. ஒரு ஐ ஸ்பெஷலிஸ்ட்கிட்ட காட்டினா ஏதாவது எக்ஸ்ட்ரா அண்ட் ஸ்பெஷல் இன்ஃபர்மேஷன் கிடைக்கலாம்ன்னு சொன்னார். அதான் உங்ககிட்டே கன்சல்ட் பண்ணிட்டு ஃபர்தரா இன்வெஸ்டிகேஷனை கண்டினியூ பண்ணலாம்ன்னு வந்தேன்..."

"அப்படீன்னா ஒரு காரியம் செய்யுங்க..."

"சொல்லுங்க ஸார்..."

"டாக்டர் சுந்தரமூர்த்தியை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும் ஸார்... லோட்டஸ் ஐ ஹாஸ்பிடல் டாக்டர் சுந்தரமூர்த்தியைத்தானே சொல்றீங்க...?"

"எஸ்... அவரேதான்... போன மாசம் கூட அவரோட ஹாஸ்பிடல்ல நடந்த 'மல்டிஸ்கேன் லாஸிக் லேஸர்' போயிருந்தேன். ஹாஸ்பிடல் வெல்எக்யூப்ட். ஹாஸ்பிடலுக்குள்ளேயே ஒரு



ரிசர்ச் சென்டரும் வெச்சு ஏர்ன் பண்ணிட்டு வர்றார். நீங்க போன்ல அவரை காண்டாக்ட் பண்ணி அப்பாயின்ட்மெண்ட் வாங்கிட்டு போய் பாருங்க. ஹி வில் ஹெல்ப்... யூ..."

டெலிபோனை நகர்த்தி வைத்தார் கமிஷனர். பசுபதி ரிஸீவரை எடுத்துக்கொண்டு டைரக்டரியில் டாக்டர் சுந்தரமூர்த்தியின் டெலிபோன் எண் பார்த்து டயல் செய்ய ஆரம்பித்தார்.

## 9

சூரியன் கண் விழித்து பார்த்துக் கொண்டிருந்த காலை ஆறு மணி.

மாங்காடு போகும் வழியில் இருந்த சோலப்பாக்கம் கிராம எல்லையில் ஒரு டீக்கடை பாய்லர் கண்ப்போடு தெரிய இன்ஸ்பெக்டர் சார்லஸ் பைக்கை நிறுத்தி பாலில் தண்ணீர் கலந்து கொண்டிருந்த அந்த ஆளைக் கூப்பிட்டார்.

"இங்கே வாய்யா..."

தூக்கிக் கட்டிய லுங்கியை பயத்தோடு தழைய விட்டுக் கொண்டே அவன் பக்கத்தில் வந்தான். "ஸ...ஸார்..." மார்புக்கு குறுக்காய்க் கைகளை கட்டிக் கொண்டான். "பால்ல தண்ணியை நானா கலக்கலை ஸார்... நாயர் சொல்லித்தான்..."

சார்லஸ் கையமர்த்தினார்.

"யோவ்! அதைவிடு. இந்த ஊர்ல சர்வசித்தி சிகிச்சை நிலையம் எங்கே இருக்கு...?"

"நொண்டி வைத்தியர் வீடுங்களா?"

"ம்... அதுதான்... சொல்லு..."

அவன் திரும்பி நின்று கை காட்டினான்.

"அதோ... கொஞ்ச தூரத்துல வேப்பமரம் ஒண்ணு தெரியுது பாருங்க சார்... அதுக்குப் பக்கத்துல மண்ரோடு ஒண்ணு போகும் சார்... அதுல கொஞ்ச தூரம் நடந்தாலே வயக்காட்டுக்கு மத்தியில் நொண்டி வைத்தியர் வீடு வரும்... வீடு ஆஸ்பத்திரி எல்லாமே ஒண்ணுதான்..."

பைக்கை விரட்டினார் சார்லஸ்.

வேப்பமரத்துக்குப் பக்கத்தில் செம்மண் ரோடு ஒன்று பிரிந்து வா என்று கூப்பிட்டது.

பைக்கில் இரண்டு நிமிஷம் தடதடத்த பயணம். குடிசை வீடுகள் சட்டென்று பார்வைக்கு கிடைத்து பின்னுக்குப் போய் பின் ஒரு வயல்வெளி பச்சை பசேலென்று விரிந்தது.

அடித்த காற்றில் சோளப்பயிர் மணம்.

பைக் ஒரு வளைவில் திரும்பியதும் ஒரு போர்டு அம்புக் குறியோடு 'சர்வசித்தி சிகிச்சை நிலையத்துக்கு போகும் மார்க்கம்' - என்று வழி காட்டியது.

பைக்கின் வேகத்தைக் குறைத்து பார்வையை துரத்தினார்.

சிறிது தொலைவில் வயல்வெளிக்கு மத்தியில் பனையோலைகளால் வேயப்பட்ட பெரிய குடிசை ஒன்று தென்னை மரங்களுக்கு மத்தியில் தெரிந்தது.

சார்லஸ் அந்த குடிசைக்கு வெகு அருகாக போய் பைக்கை மௌனப்படுத்திவிட்டு வயல்வரப்பில் நடந்து குடிசையை நோக்கிப் போனார்.

குடிசையின் நெற்றியில் ஒரு போர்டு தெரிய அதில் சர்வசித்தி சிகிச்சை நிலையம்



என்ற கோணல் மாணலான எழுத்துக்கள் தெரிந்தன.

கதவு சாத்தியிருந்தது.

சார்லஸ் வாசற்படி ஏறி கதவைத் தட்டுவதற்காக கை வைக்க அது உள்ளே போயிற்று.

பார்வைக்கு யாரும் கிடைக்கவில்லை.

குரல் கொடுத்தார்.

"யார் உள்ளே...?"

உடனே உள்ளேயிருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள்.

"யாரு...?" என்று கேட்டுக் கொண்டே வந்தவள் சார்லஸைப் பார்த்துவிட்டு திகைத்த கண்களோடு கேட்டாள்.

"யார் வேணுங்க..."

"இங்கே வைத்தியர்...?"

"அவர் பம்பு செட்டுக்கு குளிக்க போயிருக்கார். இப்ப வந்துடுவார்... என்ன விஷயம்ங்க?"

"அவர்கிட்ட கொஞ்சம் பேசணும்..."

அந்தப் பெண் ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டாள். "உட்காருங்க..." சொல்லிவிட்டு ஒரு மிரண்ட பார்வையோடு உள்ளே போனாள்.

சார்லஸ் நாற்காலிக்கு சாய்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்க்க சுவரில் வரைபடங்கள் விதவிதமாய் தொங்கின.

கருங்குரங்கு தைலம்
காட்டு அணில் லேகியம்
துஷ் நோய் நிவாரணி
பாதாள வேர் பஸ்பம்.

பக்கத்தில் இருந்த கண்ணாடி மரப் பீரோவுக்குள் சின்னதும் பெரியதுமாய் நிறைய பாட்டில்கள். பாட்டில்களில் நிறம் நிறமாய் அசையும் திரவங்கள்.

பத்து நிமிஷம் கரைந்திருந்த போது -

வாசலில் நடைச்சத்தம் கேட்டது.

சார்லஸ் திரும்பிப் பார்க்க - தாடி வைத்த அந்த குள்ளமான மனிதர் இடுப்பில் வேஷ்டியும் தோளில் போட்ட துண்டுமாய் ஒரு காலைச் சாய்த்து விந்தி விந்தி நடந்து வந்து கொண்டிருந்தார்.

'இந்த காரணத்துக்காகத்தான் நொண்டி வைத்தியர் என்கிற பெயரா...?'

உள்ளே வந்தவர் சார்லஸ்ஸை பார்த்து முகத்தில் கேள்விக் குறியோடு நிற்க - அந்தப் பெண் எட்டிப் பார்த்து பதட்டக் குரலில் சொன்னாள்.

"உங்களைப் பார்த்து பேசறதுக்காகத்தான் வந்திருக்கார்"

வைத்தியர் சார்லஸ்ஸை சலனம் இல்லாமல் பார்த்தபடி கேட்டார்.

"என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?"

"ஒரு விசாரணைக்காக உங்களை சில கேள்வி கேட்க வேண்டியிருக்கு..."

வைத்தியர் ஒரு ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

"கேளுங்க..."

"28914457 உங்க டெலிபோன் நெம்பர்தானே...?"

"ஆமா..."

"போன் எங்கே இருக்கு...?"

"உள் அறையில..."



"நேத்து ராத்திரி உங்களுக்கு போன் பண்ணினேன். மணி அடிச்சிட்டேயிருந்தது. ஏன் ரிஸீவரை எடுக்கலை...?"

"நானும் என்னோட மனைவியும் மூலிகை மருந்துகளை வாங்கறதக்காக வேலூர் போய்ட்டு இன்னிக்கு விடிகாலை அஞ்சுமணிக்குத்தான் வீட்டுக்கு வந்தோம்... வீட்ல யாரும் இல்லேன்னா ரிஸீவரை எப்படி எடுப்பாங்க...?"

"சரி... உங்களுக்கு துரையப்பன் தெரியுமா?"

"எந்த துரையப்பனை கேட்கறீங்க...?"

"சினிமாத்துறையில் இருக்காரே...?"

"ஓ... அவரா...? நல்லாத் தெரியுமே...! என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்... அவர் ஏதாவது தப்பு பண்ணிட்டாரா?"

"அவர் தப்பான ஆசாமியா... சரியான ஆசாமியான்னு எனக்கு தெரியாது. ஒரு கேஸ் விஷயமா அவர் மேல சந்தேகம் விழுந்திருக்கு...அதுசம்பந்தமானஎன்கொய்ரி பண்ணத்தான் வந்திருக்கேன்."

"சரி... நீங்க இப்போ என்கிட்ட என்ன கேட்கப்போறீங்க...?"

"துரையப்பன்நடிகைநித்யகலாவுக்குமாமா முறை. அது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்..."

"அவர் ஒரு லாட்ஜில் தங்கியிருக்கிற விஷயமும் தெரியுமா?"

"தெரியும்..."

"உங்களுக்கும் அவர்க்கும் எப்படி பழக்கம்?"

"பெரியபழக்கமெல்லாம்கிடையாது. அவர் என்கிட்ட வைத்தியம் பண்ணிக்கிறதுக்காக வர்ற ஒரு நோயாளி."

"அவர்க்கு என்ன உடம்பு...?"

"சரவாங்கிஎன்கிறகடுமையானமூட்டுவலி அவர்க்கு இருக்கு..."

"எத்தனை நாளா உங்ககிட்ட வந்துட்டிருக்கார்...?"

"கடந்த ஒரு மாச காலமாத்தான்."

"அவரே உங்களைத் தேடிகிட்டு வந்தாரா... இல்லை அவரை யாராவது உங்ககிட்ட கூட்டிட்டு வந்தாங்களா...?"

"இங்கே அவரைக் கூட்டிட்டு வந்தது குணசேகரன்னு ஒருத்தர்..."

"அவர் யாரு...?"

"அவரும் ரொம்ப நாளைக்கு முன்னாடி தன் உடம்புல இருக்கிற ஒரு குறைக்காக என்கிட்ட மருத்துவம் பார்த்துகிட்டவர்."

"அந்த குணசேகரனுக்கு சொந்த ஊர் இதே சென்னை தானே...?"

"ஆமா... பாண்டிபஜார்ல இருக்கிற 'குரு வீடியோஸ்' அவரோட கடைதான்..."

சார்லஸ் உற்சாகமானார்.

விஷயங்கள் மளமளவென்று வந்து கேஸில் லேசாய் வெளிச்சம் அடிக்க ஆரம்பித்துவிட்டது.

"உங்க பேர் என்னான்னு தெரிஞ்சுக்கலாமா?"

"என் பெயர் தீர்த்தகிரி. ஆனா நொண்டி வைத்தியர்ன்னு சொன்னாத்தான் எல்லார்க்கும் தெரியும்..."

"துரையப்பனை நீங்க கடைசியா என்னிக்கு பார்த்தீங்க...?"



"நாலு நாளைக்கு முன்னாடி சாயந்தரம் இங்கே வந்திருந்தார். கருங்குரங்கு ரத்தம் வாங்கிட்டுப் போறதுக்காக ஒரு மணி நேரம் காத்திருந்தார்."

சார்லஸ் இப்போது திடுக்கிட்டார்.

"கருங்குரங்கு ரத்தமா...?"

"ம்..."

"எதுக்கு...?"

"அவர்க்குத்தான் சரவாங்கி மூட்டு வியாதி இருக்கே?

அந்த வியாதி குணமாகறதுக்கு உலகத்தில் இருக்கிற ஒரே மருந்து கருங்குரங்கு ரத்தம்தான்."

"அந்த ரத்தத்தை என்ன பண்றது...?"

"வலி அதிகமாகும் போது அந்த ரத்தத்தை உள்ளங்கை அளவுக்கு எடுத்து மூட்டு மேல வெச்சு சூடு பறக்கத் தேய்ச்சு கிட்டா வலி அந்த நிமிஷமே போயிடும். ஒரு ஆறுமாசம் தொடர்ந்து போட்டுகிட்டா அப்புறம் அந்த நோயே குணமாயிடும்..."

"நாலு நாளைக்கு முன்னாடி இங்கே வந்து கருங்குரங்கு ரத்தம் வாங்கிட்டு போனாரா?"

"ம்...! எதிர்பார்த்த அளவுக்கு ரத்தம் கிடைக்கலை. ஒரு தடவைக்கு வர்ற மாதிரி கொஞ்சமா ஒரு பாட்டில்ல வாங்கிட்டு போனார்..."

"உங்களுக்கு கருங்குரங்கு ரத்தம் எப்படி கிடைக்குது...?"

"மலையில் இருக்கிற ஆதிவாசிகள் கொண்டு வந்து கொடுப்பாங்க. விலை ரொம்ப ஜாஸ்தி. காரணம் கருங்குரங்குகளை பிடிக்கிறது ரொம்ப கஷ்டம். கொஞ்சம்

எமாந்தாலும் ஆள் மேல பாய்ஞ்சு கழுத்தைக் கடிச்சு குதறிடும்."

சார்லஸ்ஸின் வியப்பு அதிகமாகிக் கொண்டே போயிற்று.

"சரி... மலையில் இருக்கிற ஆதிவாசிகள் அந்த கருங்குரங்கு ரத்தத்தை எப்படி உறையாமே கொண்டுட்டு வர முடியுது...?"

வைத்தியர் அந்த இறுக்கமான சூழ்நிலையிலும் புன்னகைத்தார்.

"அதுக்கெல்லாம் வழியிருக்கு. 'ஊன் உருக்கி'ங்கிற ஒரு மூலிகை வேரை கொஞ்சம் தண்ணி விட்டு அரைச்சு அதை ரத்தத்துல கலந்துட்டா அந்த ரத்தம் நூறு வருஷமானாலும் உறையாது. கெட்டும் போகாது. அதை பாட்டிலிலிருந்து எடுத்து உபயோகப்படுத்தறதுக்கு மந்தி இரும்பு சம்பந்தப்பட்ட ஒரு குச்சியால் நல்லா கலக்கிக்கவேண்டியதுமுக்கியம். இதெல்லாம் உங்களை மாதிரி படிச்சவங்களால நம்ப முடியாது..." என்று சொன்ன வைத்தியர் குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார்.

"துரையப்பன் மேல உங்களுக்கு என்ன சந்தேகம்? எதுக்காக இந்த விசாரணை...?"

சார்லஸ் சில விநாடிகள் மௌனித்து விட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"துரையப்பனை மூணு நாளா காணோம். ஆள் எங்கே போயிருக்கார்ன்னு தெரியலை. அவர் தங்கியிருந்த லாட்ஜ் அறையோட பூட்டை உடைச்சு உள்ளே போய் பார்த்தபோது தண்ணீர் இல்லாத மண் கூஜாவுக்குள்ளே ரத்தக்கறை படிஞ்ச துணியும் ஒரு பேனாக்கத்தியும் இருந்தது. உடனே எங்களுக்கு ஒரு சந்தேகம். அந்த



அறைக்குள்ள வெச்சு அவர் கொலை செய்யப்பட்டாரா... இல்லை அவர் வேற யாரையாவது கொலை பண்ணிட்டாரான்னு குழம்பிட்டு இருந்தோம். இப்ப நீங்க சொன்ன இந்த கருங்குரங்கு ரத்த விஷயம் குழப்பத்தை ஓரளவுக்கு தெளிவாக்கிடுச்சு."

வைத்தியர் இப்போது பெரிதாய் புன்னகைத்தார். "துரையப்பன் இங்கிருந்து வாங்கிட்டு போன கருங்குரங்கு ரத்தத்தை மூட்டுமேல பூசிகிட்டு அந்த ரத்தம் படிஞ்ச கையை ஒரு பழைய துணியால துடைச்சிருக்கலாம். பேனாக்கத்தியும் இருந்ததா சொன்னீங்க... ஏதாவது இரும்புப் பொருளால ரத்தத்தைக் கலக்கணும்ங்கிறதுனால அவர் பேனாக்கத்தியை உபயோகப்படுத்தியிருக்கலாம்..."

"எனக்கும் அப்படித்தான் தோணுது..." என்ற சார்லஸ் வைத்தியரிடம் கேட்டார்.

"அந்த குணசேகரனுக்கு வீடியோ கடை எங்கே இருக்குன்னு சொன்னீங்க...?"

"பாண்டிபஜார்ல"

"போன் நெம்பர் தெரியுமா?"

"இருங்க... அவர் ஒரு தடவை தன்னோட விஸிட்டிங் கார்டை என்கிட்ட கொடுத்த மாதிரி ஞாபகம்..."

சொன்னவர் எழுந்து மர பீரோவுக்குப் போய் அதன் தலையில் கை வைத்து தேடி ஒரு சிறிய பாக்கெட் நோட்டை எடுத்து வந்தார். அந்த நோட்டைப் பிரித்து இரண்டு நிமிஷ நேரத்துக்கு தேடிப்பார்த்து ஒரு பழைய விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தார்.

"இதுலகடையோட டெலிபோன்நெம்பரும் வீட்டோட டெலிபோன் நெம்பரும் இருக்கு..."

அந்தவிசிட்டிங்கார்டை வாங்கிக்கொண்ட சார்லஸ் வைத்தியரிடம் கேட்டார்.

"குணசேகரன் இப்போ வீட்லதானே இருப்பார்?"

"ஆமா... நீங்க வேணும்னா போன் பண்ணி பாருங்க..."

"வேண்டாம்... நான் நேர்லயே போய்ப்பார்த்துக்கிறேன். நீங்க கொடுத்த தகவல்களுக்கு ரொம்ப நன்றி"

சார்லஸ் விடை பெற்றுக் கொண்டு பைக்குக்கு வந்தார்.

நாற்பத்தைந்து நிமிஷ வேகமான பயணம்.

விசிட்டிங் கார்டில் இருந்த குணசேகரனின் வீட்டைக் கண்டுபிடித்து வீட்டுக்கு முன்பாய் பைக்கை நிறுத்தினார்.

காம்பௌண்ட் சுவர் பூராவும் போகன் வில்லாக்கள் நிறம்நிறமாய்பூத்திருக்கஉள்ளே ஒரு குட்டி பங்களாரோஸ்நிற டிஸ்டெம்பர் பூச்சில் குளித்துக் கொண்டிருந்தது.

சார்லஸ் வெறுமனே சாத்தியிருந்த காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளேபோகபோர்டிகோவிலேயே ஒரு பெண் குரோட்டன்ஸ் செடிகளுக்கு பூவாளியால் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது.

சார்லஸ்ஸை பார்வையில் வாங்கியதும் பூவாளியின் தூரல் சட்டென்று நின்றது. அந்த பெண் பயமாய்க் கேட்டாள்.

"யார் வேணும்...?"

"வீட்ல குணசேகரன் இருக்காரா?"

"இல்லையே...?"

"எங்கே போயிருக்கார்...?"



"வெளியூர்ல ஒரு வி.ஐ.பி. மேரேஜ். வீடியோ கவரேஜ் பண்ண போயிருக்கார். இன்னிக்கு சாயந்தரம் வந்துடுவார். எதுக்காக அவரைப்பத்தி கேக்கறீங்க...?"

"ஒரு விசாரணைக்காகத்தான். அவர் எந்த ஊருக்கு போயிருக்கார்னு சொல்லமுடியுமா?"

"பாண்டிச்சேரி..."

"நீங்க அவர்க்கு என்ன ஆகணும்...?"

"நான் அவரோட சிஸ்டர்..."

சார்லஸ் அவளை நெருங்கி நின்றபடி மெல்லிய குரலில் கேட்டார்.

"துரையப்பன் இங்கே அடிக்கடி வருவாரா?"

"துரையப்பனா... யாரது...?"

"உன்னோட அண்ணனுக்கு வேண்டியவர்"

"அப்படி யாரையும் எங்களுக்குத் தெரியாதே" அந்தப் பெண் கண்களை விரித்து வியப்பாய் சொல்லிக்கொண்டிருக்கும்போதே உள்ளேயிருந்து அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு அம்மாள் வெளிப்பட்டாள்.

"மல்லிகா... யாரோடு பேசிட்டிருக்கேம்மா" கேட்டுக் கொண்டே வந்தவள் இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் ஒரு விநாடி முகம் நிறம் தப்பி பதட்டமானாள்.

"என்ன மல்லிகா! போலீஸ் வந்திருக்காங்க"

"அண்ணனைக் கேட்டு வந்திருக்கார்ம்மா...! யாரோ துரையப்பனாம். அவர் இங்கே அடிக்கடி வருவாரான்னு கேட்கிறார்..."

சார்லஸ் அந்த அம்மாளை ஏறிட்டாள். "பயப்படாதீங்கம்மா... நான் ஒரு விசாரணைக்காகத் தான் வந்திருக்கேன். துரையப்பன்னு ஒருத்தர் கடந்த மூணு நாலு நாளா காணோம். அந்த

துரையப்பன் உங்க மகன் குணசேகரனுக்கு ஃப்ரண்ட்ன்னு ஒருத்தர் சொன்னார். அதான் விசாரிச்சுட்டு போலாம்ன்னு வந்தேன்."

அந்த அம்மாள் இன்னமும் பதட்டமானாள். "அப்படி யாரையும் அவனுக்குத் தெரியாதே. அவனுக்கு தெரிஞ்சிருந்தா கண்டிப்பா எங்களுக்கும் தெரிஞ்சிருக்கும்"

"உங்க மகன் பாண்டிச்சேரியிலிருந்து என்னிக்கு சென்னை வர்றார்...?"

"இன்னிக்கு சாயந்தரத்துக்குள்ளே வந்துருவான்."

"அவர் வந்தா உடனே பி-4 போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ரிப்போர்ட் பண்ணச் சொல்லுங்கம்மா..."

சார்லஸ் சொல்லிவிட்டு - பைக்கைக் கிளப்பிக் கொண்டு போய்விட

அம்மாவும் பெண்ணும் வீட்டுக்குள் வேக வேகமாய்ப் போனார்கள்.

பெண்மல்லிகாகதவைச்சாத்தி தாழ்ப்பாள் போட அம்மாக்காரி ஹாலையொட்டியிருந்த பக்கவாட்டு அறைக்குள் நுழைந்தாள்.

"டேய்... குணா...! நீ சொன்ன மாதிரியே போலீஸ் உன்னைக் கேட்டுகிட்டு வீட்டு வரைக்கும் வந்துட்டாங்க"

## 10

லோட்டஸ் கண் மருத்துவ நிலையம் மற்றும் ஆராய்ச்சி மையம் அந்த மாலை வேளையில் கண் நோயாளிகளால் நிரம்பியிருந்தது.



அஸிஸ்டன்ட் கமிஷனர் பசுபதியைப் பார்த்ததுமே வரவேற்புப் பெண் பவ்யமாய் எழுந்து நின்றபடி சொன்னாள்.

"ஸார்... டாக்டர் உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கார்..." அறைப்பக்கம் கை காட்டினாள்.

பசுபதி நோயாளிகளைக் கடந்து சாத்தப்பட்டு இருந்த அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக டாக்டர் சுந்தரமூர்த்தி கண்ணாடி மேஜைக்குப் பின்னாலிருந்து புன்னகையோடு எழுந்து கை குலுக்கினார்.

"வாங்க... மிஸ்டர் பசுபதி"

"டாக்டர்...! உங்களுக்காக வெளியே நிறைய பேஷண்ட்ஸ் வெயிட் பண்ணிட்டிருக்காங்க... ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்..."

"ஸோ... வாட்... நீங்க ஒரு பப்ளிக் சர்வண்ட். உங்களுக்கு ஒரு உதவி பண்றதும் என்னோட கடமை தானே...? சொல்லுங்க... உங்களுக்கு எந்த வகையில் என்னோட ஹெல்ப் தேவைப்படுது..."

பசுபதி ஒரு பாலியுர்தீன் உறைக்குள் பத்திரப்படுத்தி வைத்து இருந்த அந்த காண்டாக்ட் லென்ஸை எடுத்து டாக்டரின் உள்ளங்கையில் வைத்தார்.

"டாக்டர்... இந்த காண்டக்ட் லென்ஸ் கொலை செய்யப்பட்ட ஒரு நபரின் கண்ணில் இருந்தது. டெட்பாடி யோட முகம் மிகவும் மோசமான முறையில் சிதைக்கப்பட்டு இருந்ததால் ஆள் யார்ன்னு இதுவரைக்கும் கண்டுபிடிக்கவே முடியலை. கொலை நடந்த இடத்தில் கிடந்த ஒரே தடயம் இதுதான். இந்த லென்ஸை ஃபாரன்ஸிக் பண்ணிப் பார்த்த

போது இது கொஞ்சம் அப்நார்மலா தெரிந்தது. இந்த லென்ஸை நீங்க பரிசோதனை பண்ணிப் பார்த்துவிட்டு ஏதாவது ஸ்பெஷலா தகவல் கொடுக்க முடியுமானால் அது இந்த கேஸுக்கு உதவியாக இருக்கும். வில்... யூ... ஹெல்ப்... மீ...?"

"சர்ட்டன்லி..." என்று புன்னகைத்த டாக்டர் சுந்தரமூர்த்தி கூர்மையான சின்ன இடுக்கியால் அந்த லென்ஸை எடுத்து பரிசோதனைக்கு உட்படுத்த ஆரம்பித்தார்.

சில நிமிஷங்களுக்குப் பின் நிமிர்ந்தார்.

"மிஸ்டர் பசுபதி! இந்த லென்ஸ் ஒரு இம்போர்ட்டட் ப்ராடக்ட். பாஸ்-லாம்ப் 'BAUSCH-LOMB' வகையைச் சேர்ந்தது. அப்படியொன்றும் ரேர் டைப்னு சொல்லிடமுடியாது. இதனோட விலையும் இரண்டாயிரம் ரூபாய்க்குள்ளே தான். ஸோ மிடில் க்ளாஸ் பீப்பிள்ஸும் ஜென்ரலா இதை ஃபிக்ஸ் பண்ணிக்கறாங்க..."

"டாக்டர்! நீங்க சொல்றதைப் பார்த்தா இந்த காண்டாக்ட் லென்ஸை வெச்சுகிட்டு - கொலை செய்யப்பட்ட நபர் யார்ன்னு கண்டுபிடிக்க முடியாது போலிருக்கே..."

"கஷ்டம்தான்... இருந்தாலும் ஒரு ரெண்டு சான்ஸ் கொஞ்சம் ப்ரைட்டா இருக்கு. அதை வேணும்னா ட்ரை பண்ணிப் பார்க்கறீங்களா...?"

"சொல்லுங்க... டாக்டர்..."

"இந்த லென்ஸோட பவர் மைனஸ் -25. இந்த பவர் ரொம்ப ரொம்ப அதிகம். இந்த அளவு பவர்க்கு உடனடியா ஆப்டிகல்ஸ்ல லென்ஸ் கிடைக்காது. ஆர்டர் பண்ணித்தான் வாங்கணும். நீங்க சிட்டியில் இருக்கிற



ஆப்டிகல் சென்டர்ஸை காண்டாக்ட் பண்ணினா மைனஸ் 25 பவர்க்கு லென்ஸ் ஆர்டர் பண்ணின நபர்கள் யார் யார்ங்கிற ஒரு லிஸ்ட் கிடைக்கும். அந்த லிஸ்ட்டை வெச்சுகிட்டு நீங்க என்கொய்ரி பண்ணினா ஆள் யார்ன்னு கண்டு பிடிச்சுடலாம்."

அஸிஸ்டண்ட் கமிஷனர் புன்னகைத்தார்.

"டாக்டர்! மெட்ராஸ் சிட்டி எவ்வளவு பெரிசா இருக்குன்னு உங்களுக்கே தெரியும். இங்கே நிறைய ஆப்டிகல்ஸ் இருக்கு... கண்ணாடிகளுக்கு பதிலாக கண்கள்ல லென்ஸ் அணியற பழக்கமும் இப்போ வெரி காமன். இந்த நிலைமையில் கொலையுண்ட நபர் அந்த லென்ஸை வாங்கினது எந்த வருஷம்ன்னும் தெரியாது. ஆப்டிகல் சென்டர்ஸுக்கு போய் எத்தனை வருஷ ஆர்டர் லிஸ்டை கேக்கறது டாக்டர்."

சுந்தரமூர்த்தி புன்னகைத்தார்.

"நீங்க வருஷக் கணக்கில் ஆர்டர் லிஸ்ட்டை கேக்க வேண்டியதில்லை மிஸ்டர் பசுபதி..."

"தென்...?"

"கடந்த ரெண்டுமாச ஆர்டர் லிஸ்ட்டை கேட்டா போதும்"

"ஈஸிட்...?"

பசுபதி மலர்ந்தார்.

"எஸ்... இந்த லென்ஸோட பளபளப்பு கண்டிஷனைப் பார்க்கும் போது... இது சமீபத்துலதான் ஆர்டர் கொடுத்து செய்யப்பட்டிருக்கணும்..."

"தேங்க்யூ... டாக்டர்... இந்த ஒரு ஹோல்டிங்கே போதும்..."

"இந்தாங்க... சிட்டியில் இருக்கிற ஆப்டிகல் சென்டர்ஸோட லிஸ்ட்... என்கொய்ரியை இன்னிக்கே ஸ்டார்ட் பண்ணிடுங்க. விஷ்...யூ...ஆல்...த...பெஸ்ட்."

பசுபதி டாக்டரின் கையைப் பற்றி குலுக்கி விட்டு வெளியே வந்தார்.

டாக்டர் கொடுத்த க்ளு மூலம் கொலையுண்ட நபர் யார் என்பதையும் கொலைக்கு காரணமானவர்கள் யார் என்பதையும் கண்டுபிடிக்க முடியுமா?

மனதுக்குள் வேண்டாத ஒரு களையாய் ஒரு பயம் எட்டிப்பார்த்தது.

# 11

இன்ஸ்பெக்டர் சார்லஸ் வீட்டுக்குப் போய் குளித்து விட்டு ஃப்ரெஷ் யூனிஃபார்மில் ஸ்டேஷன் திரும்பிய போது நடிகை நித்யகலாவின் பங்களா வாட்ச்மேன் வேலுச்சாமி பெஞ்சில் உட்கார்ந்தபடி காத்திருந்தான்.

சார்லஸ்ஸைப் பார்த்ததும் எழுந்து கும்பிட்டான்.

"அய்யா..."

"உள்ளே... வா..." தொப்பியைக் கழற்றி மேஜைமேல் வைத்துவிட்டு - உள்ளேயிருந்த ரிக்கார்ட்ஸ் ரூமுக்கு வேலுச்சாமியை கூட்டிப் போய் நிறுத்திக் கொண்டார்.

"ஏதோ முக்கியமான விஷயம் சொல்லப்போறதா சொன்னியே... என்ன விஷயம்?"

"அய்யா... நேத்து ராத்திரி நித்யகலாம்மா வீட்டுக்கு வந்தீங்க... குளியலறை பாத்டப்புக்



குள்ளே ரத்தக்கறையும் மனித விரல்களும் ரோமங்களும் கிடக்கிறதாக உங்களுக்கு வந்த போன் தகவலை நம்பித்தானே வந்தீங்க...?"

"ஆமா..."

"அந்த தகவலை போன்ல சொன்னது யார்ங்கய்யா?"

"நித்யகலாதான் பேசினாங்க. ஆனா பங்களாவுக்கு வந்து கேட்டப்ப அப்படியொரு போன் பண்ணவேயில்லைன்னு சொல்லிட்டாங்க. நித்யகலா பேரைச் சொல்லிகிட்டு யார் அப்படி போன் பண்ணினாங்கிறதை இனிமேத்தான் கண்டுபிடிக்கணும்."

வேலுச்சாமி தன் பீடிக்கறை பற்களைக் காட்டி சின்னதாய் ஒரு சிரிப்பு சிரித்தான்.

"அய்யா...! அது யார்ன்னு நீங்க கண்டுபிடிக்க வேண்டியதே இல்லை... போன்ல அப்படி பேசினது வேற யாருமில்லை... நித்யகலாம்மா தான்..."

சார்லஸ் திடுக்கிட்டார்.

"நீ என்ன சொல்றே..."

"அய்யா...! நான் நிஜத்தை சொல்லிட்டிருக்கேன். நித்யகலாம்மா கடந்த மூணு மாச காலமாகவே ராத்திரி நேரங்கள்ல ஒரு மாதிரி நடந்துக்கராங்க."

"ஒரு மாதிரின்னா...?"

"அய்யா...! ராத்திரி பதினோரு மணிக்கு மேல அந்த அம்மா தூங்கறதேயில்லை... வீடு பூராவும் உலாவிகிட்டு இருப்பாங்க. மொட்டை மாடிக்குப் போய் இருட்டுல ரொம்பநேரம் நின்னுட்டிருப்பாங்க... சிலசமயம் யார்க்காவது போன் பண்ணி பேசிட்டிருப்பாங்க... நாலைஞ்சு தடவை காரை ஓட்டிகிட்டு கூட

வெளியே போய்ருக்காங்க. பங்களாவி இருக்கிற வேலைக்காரியும் சமையல்காரனு நல்லா தூங்கிடறதுனால அவங்களுக் இந்த விஷயம் தெரியாது. நான் மட்டு நித்யகலாம்மாவோட நடவடிக்கைகளை தினசரி பார்த்துட்டிருக்கேன்."

சார்லஸ் கேட்டார்.

"அந்தம்மா ஏன் அப்படி நடந்துக்காங்க?"

"தெரியல்லைங்கய்யா..." என்றவ சற்றே தாழ்ந்த மாதிரியான குரலி "நித்யகலாம்மாவோட உடம்புக்குஎன்னான்னு குடும்ப டாக்டர் அய்யாவுக்கு தெரியும்ன்னு நினைக்கிறேங்க. அய்யா... அந்த அம்ம வுக்குத் தெரியாமே நீங்கடாக்டர் அய்யாகிட்ட விசாரிச்சா ஏதாவது உண்மை தெரியலாம்" என்றான்.

"நித்யகலாவோட ஃபேமிலி டாக்டர் யாரு...?"

"டாக்டர் விஜயகோபால்"

"அவர்க்கு வீடு எங்கே...?"

"பெசன்ட் நகர்ல கலாக்ஷேத்ரா காலனியில் ரெண்டாவது தெரு. வீட்டு நெம்பர் தெரியாதுங்கய்யா"

"சரி... நான் இப்போ கேட்கப் போகிற கேள்விக்கு நீ பூசி மெழுகாமே பதில் சொல்லணும்."

"கேளுங்கய்யா..."

"நித்யகலாவோட நடத்தை எப்படி?"

"அய்யா... அதைப்பத்தி..."

"பரவாயில்லை... சொல்லு..."

"எனக்கு நிச்சயமா எதுவும் தெரியாமே எப்படிங்கய்யா சொல்றது...?"



"தெரிஞ்சவரைக்கும் சொல்லு..."

"அடிக்கடி... நடிகர்கள் வந்துட்டு போவாங்க. முந்தியெல்லாம் பார்ட்டி நடக்கும்"

"இப்போ...?"

"நடக்கறது இல்லீங்கய்யா"

சார்லஸ் சில விநாடிகள் யோசனையில் இருந்து விட்டு தலையை ஆட்டினார்.

"சரி... நீ போ..."

வேலுச்சாமி கும்பிட்டான்.

"அய்யா...! நான் புள்ளைக் குட்டிக்காரன். இந்த விஷயமெல்லாம் நான்தான் சொன்னதா வெளியே யார்கிட்டேயும் சொல்லிடாதீங்கய்யா... வேலையும் போயிடும். பொல்லாப்பும் வந்து சேரும்..."

சார்லஸ் வேலுச்சாமியின் முதுகில் ஆதரவாய் கை வைத்தார்.

"இவ்வளவு தூரம் நீ துணிச்சலா வந்து நித்யகலாவோட நடவடிக்கைகளைப் பற்றி சொன்னதே பெரிய விஷயம். நீ தைரியமா போ... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்."

வேலுச்சாமி மறுபடியும் கை குவித்து விட்டு வெளியேறிப் போக சார்லஸ் பக்கத்து அறையில் இருந்த சப்-இன்ஸ்பெக்டர்க்கு குரல் கொடுத்தார்.

"முரளி..."

"ஸார்..." ஒரு நியூசென்ஸ் கேஸை விசாரித்துக் கொண்டிருந்த முரளி எழுந்து வந்தார்.

"நான் பெசன்ட்நகர் வரை போய்ட்டு வர்றேன். நீங்க ஒரு பத்துமணி சுமார்க்கு

பாண்டிபஜார்க்கு போய் குணசேகரனோட வீடியோகடையை ஒரு அதிரடி சோதனைக்கு உட்படுத்திப் பாருங்க..."

"ஸார்...! குணசேகரன்தான் ஊர்ல இல்லையே?"

"அந்த ஆள் இல்லேன்னா என்ன...கடையில் வேலை செய்யற ஆட்கள் இருப்பாங்க. தரோவா செக் பண்ணி பார்த்துடுங்க... துரையப்பனோட அறையில் இருந்த நித்யகலாவோட ஆபாசப் போட்டோக்களை எடுத்தது வீடியோ கடை நடத்திட்டு வர்ற குணசேகரனாக இருக்கலாம்..."

"ஸார்...! நித்யகலாவோட ஆபாச போட்டோக்கள்னு நீங்க சொன்னதும்தான் எனக்கு ஞாபகம் வருது ஸார். நீங்க கொடுத்த அந்த போட்டோக்களை வெச்சு ரகசியமான முறையில் என்கொய்ரி பண்ணினதில் போட்டோக்களில் இருந்த இரண்டு இளைஞர்களைப் பத்தின அடையாளம் கிடைச்சிருக்கு ஸார்..."

"யார் அவங்க...?"

"ஒருத்தன் பேர் கன்யாராம் ஸார். இவன் ஒரு மார்வாடி. அடையார்ல பெரிய ஜவுளி ஷோ ரூம் வெச்சிருக்கான். ரெண்டாவது பேர்வழி ஒரு கோயமுத்தூர் மில் அதிபர். ஆனா அவர் பர்மனென்டா மெட்ராஸ்லதான் தங்கியிருக்கார். இவர் பேர் நாகசுந்தரம்..."

"குட்... நீங்க மொதல்ல குணசேகரனோட வீடியோ கடைக்குப் போய் சோதனையை முடிச்சுட்டு ஸ்டேஷனுக்கு வந்துடுங்க. நான் பெசன்ட் நகர் போய்ட்டு வந்துறேன். அதுக்கப்புறமா ரெண்டு பேரும் சேர்ந்து கன்யாராம் வீட்டுக்கும், நாகசுந்தரம் வீட்டுக்கும் போய்ட்டு வந்துடலாம்."



"எஸ்... ஸார்..."

சார்லஸ் ஸ்டேஷனுக்கு வெளியே வந்தார். பைக் அவரை சுமந்து கொண்டது.

பெசன்ட் நகர்.

கலாக்ஷேத்ரா காலனி. இரண்டாவது தெருவில் டாக்டர் விஜயகோபால் வீட்டை தேடிக் கண்டுபிடிப்பதில் சார்லஸ்க்கு அவ்வளவாய் சிரமம் ஏற்படவில்லை. பெயர்ப்பலகையே சுலபமாய் காட்டிக் கொடுத்துவிட்டது.

எங்கோ புறப்பட்டுப்போக தயாராகியிருந்த விஜயகோபாலுக்கு வயது நாற்பதுக்குள் இருக்கலாம். நல்ல சிகப்பில் ஒடிசலாய் நெற்றிக்கு ஸ்ரீ சூர்ணம் இட்டுக் கொண்ட முகத்தோடு கண்ணியமான தோற்றம்.

சார்லஸ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் உடனடியாய் விஷயத்துக்கு வந்தார்.

"ஒரு பத்து நிமிஷம் உங்ககிட்ட பேசணும். ஒரு என்கொய்ரி..."

"ப்ளீஸ்... கம்"

வீட்டுக்குள் கூட்டிக்கொண்டு போனார். சமையலறையிலிருந்து ஒரு பெண் (டாக்டரின் மனைவியாக இருக்கலாம்) திகைப்பாய் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜயகோபால் தன்னுடைய தனியறைக்குக் கூட்டிப்போய் நாற்காலியைக் காட்டி சார்லஸ் உட்கார்ந்ததும் கேட்டார்.

"என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?"

"நடிகை நித்யகலாவுக்கு நீங்க எத்தனை வருஷமா ஃபேமிலி டாக்டரா இருக்கீங்க...?"

"கடந்த அஞ்சு வருஷ காலமா"

"அவங்க ஹெல்த் இப்போ எப்படியிருக்கு?"

"ஃபைன்..."

"நான் கேள்விப்பட்டவரைக்கும் இப்படி இல்லை போலிருக்கே?"

"வாட்... டூ... யூ... மீன் இன்ஸ்பெக்டர்?"

"டாக்டர்...! ஒரு பேஷண்ட் உங்ககிட்ட உண்மைகளை மறைக்கிறது எவ்வளவு தப்போ அதே மாதிரி ஒரு போலீஸ் ஆபீஸர் ஒரு கேஸ் சம்பந்தப்பட்ட விசாரணைக்கு வந்தா அந்த உண்மைகளை மறைக்கறதும் தப்பு... கடந்த மூணுமாச காலமா நித்யகலா ராத்திரி நேரங்களில் இயல்பா இல்லையாமே உண்மையா...?"

"உங்களுக்கு யார் சொன்னது..."

"சம்... எக்ஸ்...! அதைப்பத்தி உங்களுக்கு என்ன டாக்டர்... தகவல் உண்மையா... பொய்யா?"

"அது... வந்து..."

"டோண்ட் ஹைட் எனிதிங் டாக்டர். நீங்க சொல்லப்போகிற பதில வெச்சுகிட்டுதான் ஒரு கேஸை சரியான கோணத்தில் ஹேண்டில் பண்ண முடியும்..."

டாக்டர் விஜயகோபால் ஒரு பெருமூச்சோடு சார்லஸ்ஸை ஏறிட்டார்.

"இட்ஸ் .. ஓ.கே. இன்ஸ்பெக்டர். நான் உண்மையைச் சொல்லிடறேன். பட் இந்த விஷயம் ப்ரஸ்ஸுக்கு போகக்கூடாது. ஐ... மீன்... பேப்பர்ல வரக்கூடாது."

"வராது! டோன்ட் வொரி..."

"இப்ப... இப்படி சொல்லிட்டு அப்புறம் பேப்பர்க்கு கொடுத்துடடீங்கன்னா நித்திய கலாவோட இமேஜ் ரொம்பவும் பாதிக்கப் படும்..."



"நோ... டாக்டர்! என்னை நம்பி நீங்க தாராளமா சொல்லலாம்..."

விஜயகோபால் சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு பின் வாயைத் திறந்தார்.

"இன்ஸ்பெக்டர்! பகல் நேரத்துல இயல்பா இருக்கிற நித்யகலா ராத்திரி நேரத்துல ரெஸ்ட்லஸ்ஸா பிஹேவ் பண்றாங்க. சில ராத்திரி நேரங்கள்ல அவளுடைய நடவடிக்கைகள் விசித்திரமா இருக்கும்."

"எக்ஸ்க்யூஸ்...மீ டாக்டர்! நித்யகலா ராத்திரி நேரங்கள்ல ரெஸ்ட்லஸ்ஸா இருக்கிற விஷயம் உங்களுக்கு எப்பயிருந்து தெரியும்...?"

"மூணு மாசத்துக்கு முந்தி ஒருநாள் ரததிரி மிட் நைட் ஒரு மணி சுமார்க்கு நித்யகலாகிட்டயிருந்து எனக்கு போன் வந்தது. 'டாக்டர் எனக்கு பயங்கரமா ஜுரம் அடிக்குது. என்னோட ஹீட்டை என்னாலேயே தாங்கிக்க முடியலை. ப்ளீஸ் உடனே புறப்பட்டுவாங்க'ன்னு சொன்னா. நான் அதே நிமிஷம் கிளம்பிப் போனேன். நான் நித்யகலா பங்களாபோய்ச் சேர்ந்த போது அது அமைதியா இருந்தது. நான் நித்யகலா ரூமுக்கு போய் தூங்கிட்டிருந்த அவளை எழுப்பினேன். அவ எந்திரிச்சு என்ன டாக்டர் இந்த நேரத்துல வந்திருக்கீங்கன்னு கேட்டா. நீதாம்மா போன் பண்ணி உனக்கு பயங்கரமான காய்ச்சல்ன்னு சொல்லி என்னை உடனடியா வரச்சொன்னேன்னு நான் கேட்டதுக்கு கனவு கண்டிங்களா டாக்டர்ன்னு சொல்லி சிரிக்கிறா. அந்த சிரிப்பிலேயே எனக்கு ஒரு வித்தியாசம் தெரிந்தது. நான் பேஸிக்கலி சைக்யாட்ரிஸ்ட்டும் கூட. ஸோ நித்யகலாவை க்ளோஸா வாட்ச்

பண்ணினேன். மேற்கொண்டும் அவளுடைய நடவடிக்கைகள் வித்தியாசமா இருக்கவே ஒருதடவை அவஜென்ரல் செக்கப்புக்காக வந்தபோது அவளை சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்கு கொண்டுபோய் பேசிப் பார்த்தேன். மனரீதியோ அவளுக்கு என்ன வியாதிங்கிறதையும் கண்டுபிடிச்சேன்."

"என்ன வியாதி டாக்டர்...?"

"நித்யகலாவுக்கு அழகு, பணம், புகழ் எல்லாமே குறைவில்லாமே இருந்தாலும் அவள் ஆழ் மனதில் சந்தோஷம் இல்லை. சந்தோஷம் இல்லாமே போனதுக்குக் காரணம் இந்த சினிஃபீல்டில் அவளை ஏமாற்றிய சில ஆண்கள். அவர்களை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்பதில் ஒரு தீவிரம். அந்த தீவிரத்தின் வெளிப்பாடு அவளுடைய மூளையைப் பாதிக்கும் போது - என்ன செய்வது என்று தெரியாமல் கன்னாபின்னாவென்று செயல்படுவாள். உணர்வுகளின் வீச்சில் உடம்புக்கு காய்ச்சலும் வரலாம். அப்படி காய்ச்சல் வந்தபோது தான் அவளையும் அறியாமல் டெலிபோன் பண்ணியிருக்கிறாள். பண்ணிட்டு உடனே மறந்து போய்விட்டாள்."

சார்லஸ்குறுக்கிட்டுநேற்றுஇரவுநித்யகலா தனக்கு போன் பண்ணிய விபரத்தைச் சொல்ல விஜயகோபால் உன்னிப்பாய் செவி மடுத்துவிட்டு வியப்பு காட்டினார்.

"நித்யகலாவோட நடவடிக்கைகள் இன்னும் மோசமான நிலைமையை நோக்கி போய்கிட்டிருக்கு. அவ யார் யாரையோ பழிவாங்கநினைக்கிறா. அந்த ஆத்திரத்தோட வெளிப்பாடுதான் இப்படியெல்லாம் அவளை நடந்துக்க வைக்குது இன்ஸ்பெக்டர்.



பாத்டப்புக்குள்ளே ரத்தக்கறை, மனிதவிரல்கள், மனித ரோமம் இதெல்லாம் இருக்குன்னு அவ சொன்னதுக்கு காரணம் என்ன தெரியுமா...?"

"சொல்லுங்க டாக்டர்?"

"அதே மாதிரி யாரையோ பாத்டப்புக்குள்ள வெச்சு தீர்த்துக்கட்ட நினைக்கிறா... இது அவளோட சப்கான்ஷியஸ் மைண்டில் உள்ள எண்ணம். பட் அவளோட உண்மையான கான்ஷியஸ் மைண்ட் போலீஸ்ல மாட்டிக் கொள்ளக் கூடாதுன்னு நினைக்குது. இந்த ரெண்டுக்கும் நடுவில் நடக்கிற பேராட்டத்தின் காரணமாத்தான் நித்யகலா உங்களுக்கு தன்னையும் அறியாமே போன் பண்ணியிருக்கணும்."

சார்லஸ் கேட்டார்.

"நித்யகலாவுக்கு தன்கிட்ட இருக்கிற இந்த விபரீத போக்கு தெரியுமா...?"

"தெரியாது... அதை அவளுக்கு தெரியப் படுத்தினா அவளோட பகல் நேர வாழ்க்கையும் அப்செட்டாயிடும். அதுக்கப்புறம் அவ ஒரு மனநோயாளியாகவே மாறிப்போக வாய்ப்பு இருக்கு... அதனாலே நித்யகலாவுக்கே தெரியாமமே ஒரு மெடிக்கல் ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சிருக்கேன். மானிக் மாத்திரைகள்ன்னு சொல்லி அவ நோய்க்கான மாத்திரைகளைக் கொடுத்துட்டு வர்றேன்... பட் பலன் கிடைக்கிற மாதிரி தெரியலை..."

"டாக்டர்! நித்யகலாவோட சப்-கான்ஷியஸ் மைண்டில் சில ஆண்களை பழி தீர்க்கிற எண்ணம் இருக்கிறதா சொன்னீங்க...?"

"ஆமா..."

"அந்த ஆண்கள் யார் யார்ன்னு உங்களாலே கண்டுபிடிக்க முடிஞ்சதா...?"

"முடியலை... அவ ஆழ்நிலை மயக்கத்தில் இருக்கும் போது அந்தக் கேள்வியைக் கேட்டா மட்டும் மௌனம் ஆயிடறா..."

சார்லஸ் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு கேட்டார்.

"துரையப்பனைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க டாக்டர்...?"

"அவர் நித்யகலாவுக்கு ஏதோ தூரத்து உறவு. மாமா முறையாகணும். கால்ஷீட் விவகாரங்களை கவனிச்சுகிட்டு ஒழுக்கமா இருந்தவர் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு இருந்த வேலையையும் தொலைச்சுகிட்டார். நித்யகலா அவரை வீட்டைவிட்டே துரத்திட்டாள். அவர் இப்போ ஏதோ ஒரு லாட்ஜில் தங்கியிருக்கிறதாக கேள்விப்பட்டேன். அவரைப் பத்தி இப்ப எதுக்காக கேட்கறீங்க இன்ஸ்பெக்டர்?"

"அவர் மூணுநாளா காணோம்."

"என்னது...?"

"அவர் தங்கியிருந்த லாட்ஜுக்கு போய்விசாரித்துப் பார்த்தேன். மூணு நாளைக்கு முன்னாடி வெளியே போனவர் இன்னும் திரும்ப வரலை. அவரைத் தேடிக் கண்டுபிடிக்கிற முயற்சியில் நான் இப்போ தீவிரமா ஈடுபட்டிருக்கிறேன். டாக்டர்! நீங்க சொன்ன தகவல்களையெல்லாம் வெச்சு பார்க்கும் போது நித்யகலா துரையப்பனை தீர்த்து கட்டியிருக்கலாமோன்னு என் மனசுக்குப் படுது..."

"நோ... நோ... இன்ஸ்பெக்டர் துரையப்பன் கால்ஷீட் விவகாரங்களில் ஏதேதோ குளறுபடி



பண்ணி குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க நினைச்சாரே தவிர மற்றபடி அவர் நல்ல மனுஷன்..."

சார்லஸ் புன்னகைத்தார்.

"நீங்க நினைக்கிற மாதிரி துரையப்பன் நல்லவர் கிடையாது டாக்டர். அவரோட ரூம்ல நித்யகலாவோட நிர்வாண போட்டோக்கள் இருந்தது. ஒவ்வொரு போட்டோவிலும் ஒவ்வொரு இளைஞனோடு போஸ்..."

"இன்ஸ்பெக்டர்! நீங்க சொல்ற விஷயம் எனக்கு அதிர்ச்சியாயிருக்கு..."

"இதில் அதிர்ச்சியடைய ஒண்ணுமே யில்லை டாக்டர். நித்யகலா சில ஆண்களோடு ஜாலியா இருந்திருக்கலாம். அதை துரையப்பன் போட்டோ எடுத்து வெச்சுகிட்டு நித்யகலாவை ப்ளாக்மெயில் பண்ணியிருக்க லாம். ப்ளாக்மெயில் தொல்லையை தாங்கிக்க முடியாத நித்யகலா. துரையப்பனைத் தீர்த்துக்கட்டி எங்கேயாவது டிஸ்போஸ் பண்ணியிருக்கலாம்..."

"நோ... இன்ஸ்பெக்டர்...! நித்யகலா அப்படி செய்யக் கூடியவள்ன்னு என் மனசுக்குப் படலை..."

"என்ன டாக்டர்... இப்பத்தான் கொஞ்ச நேரத்துக்கு முந்தி சொன்னீங்க... நித்யகலா வோட அடி மனசுக்குள்ளே சில ஆண்களைப் பழிவாங்கற எண்ணம் இருக்கிறதா. அந்த சில ஆண்கள்ல ஒருத்தரா துரையப்பன் ஏன் இருக்கக்கூடாது...?"

"நித்யகலாகிட்ட இதைப்பத்தி பேசிட்டீங்களா இன்ஸ்பெக்டர்...?"

"இல்லை...! இந்த கேஸ் விஷயமா இன்னும் சில பேரை விசரிக்க வேண்டியிருக்கு.

அந்த விசாரணை முடிஞ்சபிறகு தான் ஒரு முடிவுக்கு வரமுடியும்..."

டாக்டர் விஜயகோபால் மோவாயைத் தாங்கிக் கொண்டு கவலையானார்.

# 12

அஸிஸ்டண்ட் கமிஷனர் பசுபதி கமிஷனர்க்கு முன்பாய் கையில் ஒரு சின்ன ஃபைலோடு நின்றிருந்தார்.

கமிஷனர் கேட்டுக் கொண்டிருந்தார்.

"என்ன... மிஸ்பர் பசுபதி...! அந்த கான்டாக்ட் லென்ஸ் என்கொய்ரி என்னாச்சு...?"

"அந்த என்கொய்ரியை முடிச்சட்டு நேரா இப்போ உங்ககிட்டதான் வந்திருக்கேன் ஸார்..."

"தட்ஸ் குட்...! டிட் யூ கெட் எனி க்ளு...?"

"எஸ்... சிட்டியில் இருந்த எல்லா ஆப்டிகல்ஸிலும் விசாரணை பண்ணியதில் மைலாப்பூரில் இருந்த ஆப்டிக் க்ராஃப்ட் கடையில் க்ளு கிடைச்சுது ஸார். மைனஸ் பவர் -25க்கு ஆர்டர் கொடுத்த நபர் யார்ன்னு தெரியவந்தபோது ஒரு சின்ன அதிர்ச்சி ஸார்..."

"சொல்லுங்க... யார் அந்த நபர்...?"

"அவர் ஒரு அரசியல் பிரமுகர் ஸார். அதிலும் முன்னாள் எம்.பி."

"பேரு..."

"மல்லிகைக் கண்ணன்..."

"அப்படீன்னா மணலுக்கு அடியில் செத்துக் கிடந்தது எம்.பி. மல்லிகைக் கண்ணனா...?"



"இருக்கலாம் ஸார்..."

"மல்லிகைக் கண்ணனோட வீட்டுக்குப் போய் விசாரிச்சீங்களா?"

"இல்ல...ஸார்...இனிமேத்தான்போகணும். பர்சன் ஒரு வி.ஐ.பி.யா இருக்கிறதனால உங்களை ஒரு வார்த்தை கேட்டுட்டு போலாம்ன்னு இருக்கேன்..."

"லேட் பண்ணாதீங்க... கிளம்புங்க. அவரோட வீடு தெரியுமா?"

"தெரியும் ஸார்"

"யூனிஃபார்மை தவிர்த்துவிட்டு சிவில் ட்ரஸ்ல போய் மல்லிகைக் கண்ணன் வீட்ல கேஷுவலா விசாரிச்சு பாருங்க..."

"எஸ்... ஸார்..."

பசுபதி சல்யூட் ஒன்றை பதித்துவிட்டு அறையினின்றும் வெளிப்பட்டு தன்னுடைய அறையை நோக்கி போக - எதிரே இன்ஸ்பெக்டர் சார்லஸ் எதிர்பட்டு அட்டென்ஷனுக்கு வந்தார்.

"ஸார்..."

"என்ன சார்லஸ்...?"

"ஸார்... ஒரு கட்டிட கன்ஸ்ட்ரக்ஷனோட கீழ்தளத்தில் கொட்டி வெச்சிருந்த மணலுக்கு கீழே சிதைஞ்ச முகத்தோடு கிடந்த பாடி யோரோடதுன்னு ஐடன்டிஃபை பண்ணிட்டீங்களா...?"

"நாட் யெட்...! அது சம்பந்தமான இறுதி கட்ட விசாரணையில்தான் இப்போ இருக்கேன். ஏன் உங்களுக்கு அதைப் பத்தி ஏதாவது தகவல் தெரியுமா?"

"இல்ல ஸார்... துரையப்பன்னு ஒருத்தர். நடிகை நித்யகலாவுக்கு தூரத்து உறவு. அவரை மூணு நாளா காணோம். ஒரு வேளை அந்த

பாடி துரையப்பனோடதாக இருக்கலாம்ன்னு ஒரு சந்தேகம்..."

"நீங்க துரையப்பனை பார்த்திருக்கீங்களா?"

"இல்ல... ஸார்..."

"பாடியை யார் ஐடென்டிஃபை பண்ணுவாங்க...? அந்த நடிகையா...?"

"இல்ல ஸார்..."

"பின்னே...?"

"துரையப்பன் தங்கியிருந்த தென்றல் லாட்ஜ்க்கு இன்சார்ஜா இருக்கிற சிவானந்தம்..."

"ஆள் வந்திருக்கானா...?"

"இல்ல ஸார். லாட்ஜுக்குப் போய் கூட்டிட்டு வரணும்."

"சரி... நீங்க ஒரு காரியம் பண்ணுங்க. மார்ச்சுவரியில் பாடி இருக்கு. போய்க் காட்டுங்க... நான் ஒரு அரைமணி நேரத்துக்குள்ள வந்துடுவேன்."

"எஸ்... ஸார்..."

சார்லஸ் மறுபடியும் சல்யூட் அடித்துவிட்டு விலகிப் போக - அஸிஸ்டண்ட் கமிஷனர் பசுபதி தன்னுடைய அறைக்குப் போய் - யூனிஃபார்மை களைத்துவிட்டு ஒயிட் பேண்ட் ஒயிட் ஷர்ட்டுக்கு மாறினார்.

வெளியே வந்து ஒரு ஆட்டோ பிடித்தார்.

"தேனாம்பேட்டை தமிழ்த்தாய் நகர்க்குப் போ."

ஆட்டோ கிளம்பியது.

தமிழ்த்தாய் நகர்.

பசுபதி இறங்கிக் கொண்டு ஆட்டோவை அனுப்பி விட்டு மல்லிகைக் கண்ணனின் வீட்டை நோக்கி நடந்தார்.



புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் குடியிருப்பு அது. வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தள்ளித் தள்ளி தெரிந்தது.

பசுபதி முதல் தெருவில் நுழைந்து ஒரு மே ஃப்ளவர் மரத்துக்குப் பக்கத்தில் தெரிந்த அந்த வீட்டுக்கு முன்பு போய் நின்றார்.

மல்லிகைக் கண்ணன். (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) என்கிற எழுத்துக்களோடு பெயர்ப்பலகை தெரிய - முன்னால் இருந்த சிறிய காம்பௌண்ட் கதவைத் தள்ளிக் கொண்டு போக முயன்றவர் சட்டென்று நின்றார்.

வீட்டுக் கதவில் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

ஆள் இல்லை போலிருக்கிறதே? என்று யோசித்துக் கொண்டு நின்றவரை பின்னாலிருந்து வந்து குரல் கலைத்தது.

"எக்ஸ் எம்.பி.யை பார்க்க வந்தீங்களா ஸார்...?"

பசுபதி திரும்பினார்.

போஸ்ட்மேன் நின்றிருந்தார். கையில் கடிதக் கவர்கள்.

பசுபதி புன்னகையோடு தலையாட்டினார்.

"ஒரு சிபாரிசு விஷயமா பார்க்க வந்தேன். வீடு பூட்டியிருக்கு. எங்கேயோ வெளியே போயிட்டார் போலிருக்கு."

"டெல்லி போயிருக்கார் ஸார்..."

"டெல்லிக்கா...?"

"ஆமா... ஸார்...! போய் ஒரு வாரமாச்சு. மூணு நாள்லயே டெல்லியிலிருந்து திரும்பி வந்துடுவேன்னு சொன்னார். ஆனா போன வேலை முடியலை போலிருக்கு... அரசியல்

வாழ்க்கைன்னாலே இப்படித்தான்... ஸார்...!"

"உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

போஸ்ட்மேன் பெருமையாய் சிரித்தார்.

"அவரை எனக்கு ரொம்பநாளா தெரியும் ஸார். தினசரி நாலைஞ்சு லெட்டராவது அவர்க்கு வரும். அவர் ஊர்ல இருந்தா லெட்டர்ஸை கையில கொடுத்துவிட்டு ஒரு ரெண்டு நிமிஷம் பேசிட்டு போவேன். அவர் ஊர்ல இல்லேன்னா, அவர் இங்கே ஃபிக்ஸ் பண்ணி வெச்சிருக்கி றறபாக்ஸுக்குள்ள போட்டுட்டு போயிடுவேன்..." சொன்னவர் தன் கையில் வைத்து இருந்த சில கடிதக் கவர்களை காம்பௌண்ட் கேட் ஓரமாய் பொருத்தி வைத்திருந்த சிறிய பாக்ஸுக்குள் போட்டு விட்டு நடையைக் கட்டினார்.

பசுபதி தன் தாடையை இடது கை விரல்களால் வழுவியபடி அங்கேயே ஒரு நிமிஷம் யோசனை செய்தபடி நின்றிருந்தார். போஸ்ட் மேனின் வார்த்தைகள் அவருடைய சிந்தனையை லேசாய் ராவி விட்டது.

போய் ஒரு வாரமாச்சு... மூணு நாள்லேயே டெல்லியிலிருந்துதிரும்பிவந்துவிடுவேன்னு சொன்னார்...!

'மல்லிகைக் கண்ணன் இப்போது டெல்லியில் இருக்கிறாரா... இல்லையா... என்பதை எப்படி உறுதி செய்து கொள்வது...?'

'அவருடைய கட்சி அலுவலகத்தில் போய் கேட்டு பார்க்கலாமா...?'

கீச்... கீச்...

நின்றார்.



'அது என்ன சத்தம்...?' பார்வையைத் திருப்பிகாதுகளுக்கு உன்னிப்பைக் கொடுக்க அந்த சத்தம் மல்லிகைக் கண்ணனின் வீட்டுக்குள்ளிருந்து பாதி திறந்திருந்த க்ரில் ஜன்னல் வழியாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

பசுபதி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போய் க்ரில் கம்பிகள் வழியாக பார்வையைப் போட்டார்.

சூரிய வெளிச்சம் அவ்வளவாக உள்ளே நுழையாத் அரையிருட்டான வீட்டு ஹாலில் அந்த சீலிங் ஃபேன் சாவதானமாய் *'கீச் கீச்'* சென்ற சத்தத்தோடு சுழன்று கொண்டிருந்தது.

பசுபதிக்கு வியப்பு அள்ளியது.

'வீடு பூட்டியிருக்கிறது.'

ஃபேன் உள்ளே ஓடிக் கொண்டிருக்கிறது.

'யாராவது உள்ளே இருக்கிறார்களா?'

பசுபதி மனதில் முளைத்துக் கொண்டே கேள்விக் குறியோடு வீட்டைச் சுற்றிக் கொண்டு பின்பக்கம் போனார்.

இரண்டு வாழை மரங்கள் குலை தள்ளியிருக்க ஒரு தென்னை மரம் கன்னிப் பருவத்தில் இருந்தது. துணி துவைக்கும் கல் அருகே பூனை ஒன்று படுத்து இருந்தது. பசுபதியைப் பார்த்ததும் விருட்டென்று எழுந்து ஓடியது.

மூடியிருந்த பின்பக்கத் கதவை நோக்கிப் போனார் பசுபதி. அது தாழிடப்பட்டிருக்கும் என்ற நினைப்பில் கதவின் மேல் கையை வைத்தவர் - அது சத்தம் இல்லாமல் திறந்து கொண்டு உள்ளே போக திகைத்தார்.

# 13

இன்ஸ்பெக்டர் சார்லஸ் ஸ்டேஷனுக்கு வந்தபோது சப்-இன்ஸ்பெக்டர் முரளி சற்றே பதட்டமாய் காத்துக் கொண்டிருந்தார்.

சார்லஸ் கேட்டார்.

"என்ன... முரளி...! பாண்டிபஜார்க்குப் போய் குணசேகரனோட வீடியோ கடையை சோதனைப் போட்டீங்களா?"

"போட்டேன் ஸார்... அதைப் பத்தி பேசறதுக்காகத்தான் உங்களை எதிர்பார்த்து வெயிட் பண்ணிட்டிருக்கேன்."

"சோதனையில் ஏதாவது பிடிபட்டதா?"

"ஸார்... அந்த வீடியோ கடைட்யில் ஒரே ஒரு பொண்ணு மட்டும் இருந்தா... அவள் பேர் ரேவதி. சேல்ஸ் கேர்ள். ரொம்பவும் பயந்த சுபாவம். என்னைப் பார்த்ததும் அரண்டு போய்ட்டா. மாஸ்டர் 'கீ' பன்ஞ்சைப் போட்டு பீரோ மேஜை அலமாரி எல்லாத்தையும் தொறந்து பார்த்துட்டேன். நிர்வாணப்புகைப்படங்களோ கேசட்டுகளோ கிடைக்கலை. பட் ஒரு முக்கியமான லெட்டர் மட்டும் கிடைச்சது ஸார்..."

முரளி சொல்லிக் கொண்டே தன் சட்டைப் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்துஇருந்த - நான்காய் மடித்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்து நீட்டினார்.

சார்லஸ் அதை வாங்கிப் பிரித்தார். அவ்வளவு பெரிய காகிதத்தில் கொட்டை எழுத்துக்களில் இரண்டே வரிகள்.

குணசேகரா!
இன்னும் ஒருமாதம்
உனக்கு அவகாசம். அதற்குள்



நீ உன் தொழிலை மாற்றிக்
கொள்ள வேண்டும். நீ
தொழிலை மாற்றிக் கொள்ளாத
பட்சத்தில் உன் உயிர்க்கு
நாங்கள் உத்ரவாதம்
தரமாட்டோம்.

இப்படிக்கு
சிநேகா

சார்லஸ் அந்தக் கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு நிமிர்ந்தார்.

"இந்த ஒரு லெட்டர்தான் கிடைச்சதா?"

"ஆமா ஸார்... குணசேகரனோட பர்சனல் பீரோவில் இருந்தது. அந்த சேல்ஸ் கேர்ள் ரேவதி கிட்ட விசாரணை பண்ணினேன். அவளுக்கு ஒண்ணும் தெரியலை. குணசேகரன் எங்கேன்னு கேட்டா... பாண்டிச்சேரி போயிருக்கிறதா சொல்றா"

சார்லஸ் நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

"யார்... இந்த சிநேகா...? இந்த சிநேகாதான் எல்லாக் குழப்பங்களுக்கும் காரணமா...?"

"ஸார்... அந்த கட்டிட கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்பாட்ல மணலுக்கு அடியில் புதையுண்ட டெட்பாடியைப்பத்தி அஸிஸ்டன்ட் கமிஷனர் கிட்ட பேசிட்டு வந்தீங்களா?"

"இப்ப... நேரா அங்கேயிருந்துதான் வர்றேன். அவர் கிட்ட காணாமல் போயிருக்கிற துரையப்பனைப் பற்றி சொன்னேன். பாடியை ஐடென்டிஃபை பண்றதுக்கு ஆள் இருக்கான்னு கேட்டார். நான் தென்றல் லாட்ஜ் சிவானந்தத்தைக் கூட்டிகிட்டுஜி.ஹெச்மார்ச்சுவமரிக்கு வர்றதா சொல்லிட்டு ஸ்டேஷனுக்கு வந்தேன்.

இனி லாட்ஜ்க்குப் போய் சிவானந்தத்தைக் கூட்டிகிட்டு ஜி.ஹெச் போகணும்..."

"நான் இப்போ என்ன பண்ணட்டும் ஸார்?"

"சூட்டோடு சூட்டா நேரா குணசேகரன் வீட்டுக்கு போங்க. சர்ச் வாரண்டை காட்டி அங்கேயும் சர்ச் பண்ணுங்க"

"அதுக்கு அவசியமே இல்லை இன்ஸ்பெக்டர்."

குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

"அயாம் குணசேகரன்" என்று சொல்லிக்கை குவித்து கும்பிட்டான் அந்த இளைஞன்.

## 14

பின்பக்கக் கதவு உள்ளே திறந்து கொண்டதும் அஸிஸ்டண்ட் கமிஷனர் பசுபதி ஜாக்ரதையாய் உள்ளே அடியெடுத்து வைத்தார்.

சீலிங் ஃபேன் சத்தம் இப்போது பலமாய் கீச்சிட்டுக் கொண்டிருந்தது.

பசுபதி மெல்ல நடந்தார்.

சமையலறை வந்தது.

அதைக் கடந்ததும் விரியத் திறந்த படுக்கை அறை பார்வைக்குக் கிடைத்தது.

யாரும் உள்ளே இல்லை. ஃபேன் சத்தம் மட்டும் வீட்டுக்குள் கனமாய் ஈஷியிருந்த நிசப்தத்தை சிதைத்துக் கொண்டிருந்தது.

ஹாலுக்குள் எட்டிப்பார்த்து விட்டு மெல்ல படுக்கையறைக்குள் நுழைந்தார்.



குப்பென்று ஒரு கொத்து நாற்றம் அவர் முகத்தைத் தாக்க நிலை குலைந்து போன பசுபதி சட்டென்று கர்ச்சீப்பை எடுத்து நாசியை அழுத்தமாய் பொத்திக் கொண்டார்.

பார்வை அவசர அவசரமாய் அறைக்குள் அலைந்து கட்டிலுக்குக் கீழே போய் நிலை கொண்டு நின்றது.

கட்டிலுக்குக் கீழே -

நீளவாக்கில் கட்டப்பட்ட ஒரு பாலிதீன் மூட்டை.

வெளிச்சம் வருவதற்காக ஜன்னல்களைத் திறந்து வைத்துவிட்டு பசுபதி கீழே குனிந்து வலது கையால் மூக்கைப் பொத்திக் கொண்டு இடது கையால் பாலிதீன் மூட்டையை இழுத்தார்.

அது சிரமமாய் வெளியே வந்தது.

புரிந்துவிட்டது.

பாலிதீன் மூட்டைக்குள் இருப்பது ஒரு உடல். மூட்டையின் ஒரே ஒரு இடத்தில் மட்டும் லேசாய் கிழிச்சல் தெரிய - அந்த கிழிசல் வழியாக டீகம்போஸான உடம்பு காற்றை கெடுத்துக் கொண்டிருந்தது.

பசுபதி கர்ச்சீப்பை முகத்திற்கு இறுக்கமாய் கட்டிக் கொண்டு மூட்டையின் முடிச்சை மெல்ல அவிழ்த்தார்.

மூட்டை நெகிழ்ந்தது.

தலைமாட்டுப் பகுதியில் இருந்த பாலிதீன் காகித பரப்பை விலக்கி டெட்பாடியின் முகத்தைப் பார்த்தார்.

சற்றே டீகம்போஸான நிலையில் -

எக்ஸ் எம்.பி. மல்லிகைக் கண்ணன்.

# 15

இன்ஸ்பெக்டர் சார்லஸ் எரிச்சலாய் குணசேகரனைப் பார்த்தார்.

"பாண்டிச்சேரியிலிருந்து இப்பத்தான் வர்றியா?"

"ஸாரி... இன்ஸ்பெக்டர்... நான் பாண்டிச் சேரிக்கு போகலை. பாண்டிச்சேரிக்குப் போறதா வெளியே சொல்லிட்டு கடந்த நாலுநாளா வீட்டுக்குள்ளேதான் இருந்தேன்..."

"ஏன்...?"

"பயம் தான்..."

"எதுக்கு பயம்...?"

"சிநேகாவுக்கு பயந்துதான்"

"யாரந்த சிநேகா...?"

"எனக்கு தெரியாது இன்ஸ்பெக்டர். எனக்கும் துரையப்பனுக்கும் கடந்த ஒருமாச காலமா யாரோ 'சிநேகா' என்கிற பேர்ல மிரட்டல் கடிதங்களை அனுப்பிட்டு வந்தாங்க..."

"எதுக்காக மிரட்டல் கடிதம்...?"

"இன்ஸ்பெக்டர்! நீங்க என் வீடு வரைக்கும் தேடிகிட்டு வந்துட்டீங்க... இனிமேலும் உங்ககிட்ட உண்மையை மறைக்க நான் விரும்பலை. துரையப்பன் கடந்த மூணுமாசமாத்தான் எனக்குப் பழக்கம். நடிகை நித்யகலாவோடு சண்டை போட்டுகிட்டு அவர் வெளியே வந்ததும் நித்யகலாவை இந்த சினி ஃபீல்டில் இருந்தே விரட்டியடிச்சு என்னிக்குமே தீராதபடிக்கு ஒரு அவமானத்தையும் ஏற்படுத்தணும்ன்னு என்கிட்ட சொன்னார். அதுக்கு உன்னோட



உதவிதேவைப்படுதுன்னு சொன்னார். நானும் என்ன உதவின்னு கேட்டேன். வெளிநாட்டு அழகிகளோட நிவாணப் படங்களிலிருந்து தலைகளை வெட்டியெடுத்துட்டு அந்த இடத்துல நித்யகலாவோட தலையை ஒட்டி கம்ப்யூட்டர் மௌஸ் மூலமா போர்னோக்ராபி தயார் பண்ணனும்ன்னு சொன்னார். நானும் பணத்துக்கு ஆசைப்பட்டு அந்த காரியத்தை பண்ண ஒத்துக்கிட்டேன். கம்ப்யூட்டர் மௌஸ் மூலமா அப்படி தயாரிக்கப்பட்ட படங்களைப் பார்க்கும் போது - உண்மையிலேயே நித்யகலா காமிராவுக்கு முன்னாடி நின்னு பிறந்தமேனியா போஸ் குடுத்த மாதிரி இருந்தது. அதுக்கப்புறம் துரையப்பன் என்கிட்ட ஒருநாள் வந்து வெறும் நிர்வாண போஸ் போட்டோக்கள் மட்டும் தயார் பண்ணி பிரயோஜனம் இல்லை. இதே போட்டோவில் சில பணக்கார புள்ளிகள் நிதயகலாவோடு இருக்கிறமாதிரிஇருந்தா ஒரேகல்லில்ரெண்டு மாங்காய் அடிச்ச மாதிரி நித்யகலாவோட பேரைக் கெடுக்கலாம். அந்த பணக்காரப் புள்ளிகளை ப்ளாக்மெயில் பண்ணி பணமும் பறிக்கலாம்ன்னு சொன்னார். நான் அந்த யோசனைக்கு ஒத்துக்கலை. 'உங்களுக்கு குடும்பம் இல்லை. என்ன வேணும்னாலும் பண்ணுவீங்க. ஆனா எனக்கு குடும்பம் இருக்கு. கல்யாண வயசுல ஒரு தங்கச்சியும் இருக்கா. இனிமே உங்களுக்கும் எனக்கும் சரிப்படாது'ன்னு சொல்லிட்டு வந்தேன். இந்த நேரத்துலதான் 'சிநேகா'ன்னு யாரோ எங்க ரெண்டு பேர்க்குமே மிரட்டல் கடிதங்களை அனுப்பிகிட்டு இருந்தாங்க..."

சார்லஸ் குறுக்கிட்டு கேட்டார்.

"மொத்தம் எத்தனை கடிதங்கள் அப்படி வந்திருக்கும்?"

"ஏழோ... எட்டோ இருக்கும்...! இப்படி மிரட்டல் கடிதம் வந்ததுமே நான் பயந்து போய் துரையப்பன்கிட்ட பழகறதையே நிறுத்திகிட்டேன். என்னோட விலகலைப் பத்தி துரையப்பன் கவலைப்படலை. ஒரு பெரிய இடமா பார்த்து ஒட்டிகிட்டு அந்த போர்னோக்ராபி வேலைகளை பண்ண ஆரம்பிச்சார். பல பணக்காரப் புள்ளிகளை ப்ளாக்மெயில் பண்ணி பணமும் பறிக்க ஆரம்பிச்சார்..."

சார்லஸ் குணசேகரனை கையமர்த்தி விட்டு கேட்டார்.

"துரையப்பன் பெரிய இடமாப் பார்த்து ஒட்டிகிட்டார்ன்னு சொன்னியே அந்த பெரிய இடம் யாரு...?"

"அது... வந்து... வந்து..."

"தைரியமா சொல்லு...! எல்லா உண்மைகளைளயும் தான் சொல்றதுக்குன்னு வந்துட்டியே அப்புறம் என்ன? யார் அந்த பரிய இடம்...?"

"அவர் எக்ஸ் எம்.பி. மல்லிகைக் கண்ணன் ஸார்..."

சார்லஸ் ஆச்சர்யப்பட்டார். "அவர் ஒரு எக்ஸ் எம்.பி. டெல்லி அரசியலில் செல்வாக்குள்ள ஒரு நபர். அவர் எப்படி துரையப்பன்கிட்ட போய் மாட்டினார்?"

"ஸார்...! அந்த விஷயமும் எனக்குத் தெரியும். ஆனா என்னோட வாக்குமூலத்துல இதை நான் சொன்னதா நீங்க வெளியே சொல்லக்கூடாது..."



"சொல்லமாட்டோம்...! ஆனா நீ சொல்ற விஷயம் உண்மையா இருக்கணும்."

"நான் இப்போ சொல்லப் போறது நூறு சத வீத உண்மை ஸார்! எக்ஸ் எம்.பி. மல்லிகைக் கண்ணன் அடிக்கடி டெல்லிக்கு போய்ட்டு வர்றதோட நோக்கம் தமிழ்நாட்டு எம்.பிக்கள் சிலபேரை கட்சி மாற வெச்சு மத்தியில் இருக்கிற ஆட்சியைக் கவிழ்க்கிறதுதான். இதில் வடநாட்டில் இருக்கும் சில எம்.பி.க்களும் அடக்கம். சில எம்.பிக்களை பணத்தால சரிக்கட்டிட்டாங்க. ஆனா குறிப்பிட்ட நாலு எம்.பிக்கள் பணத்தையும் வாங்கிட்டு நடிகை நித்யகலாவையும் ரெண்டு நாளைக்கு டெல்லிக்கு அனுப்பி வெக்கச் சொன்னாங்க. மல்லிகைக் கண்ணன் நேரடியா நித்யகலா கிட்ட இதைப்பத்தி பேசப்போக அந்த நடிகை செருப்பைக் கழட்டி மல்லிகைக் கண்ணனை சாத்தியிருக்காங்க. அதுக்கப்புறம் மல்லிகைக் கண்ணனோட கவனம் பூராவும் நித்யகலாவை எப்படி பழி வாங்கறதுங்கிற எண்ணத்திலேயே இருந்திருக்கு. நித்யகலாவால் ஏற்கெனவே வீட்டைவிட்டு துரத்தப்பட்ட துரையப்பனின் உதவியோடு மல்லிகைக் கண்ணன் நித்யகலாவை ஃபீல்டை விட்டே ஒழிச்சுக் கட்ட திரைமறைவுல என்னென்னமோ வேலையெல்லாம் பண்ணிட்டிருந்தார்.

அவர் என்ன பண்ணினார்ன்னு எனக்குத் தெரியாது ஸார்... ஆனா... துரையப்பனை எப்பவாவது நான் சந்திக்கிறபோது அவர் நித்யகலாவோட ஆட்டமெல்லாம் இனி கொஞ்சநாளைக்குத் தான்... அவ என்ன பாடுபடப்போறான்னு நீ பார்க்கத்தான் போறேன்னு சொல்லுவார்..."

"சரி... யார் அந்த சிநேகா...?"

"எனக்குத் தெரியாது ஸார். துரையப்பன் மூணு நாளா காணோம்ன்னு நான் கேள்விப்பட்ட நிமிஷத்துலயிருந்து வெளியே எங்கேயும் போகாமே வீட்டுக்குள்ளேயே இருந்துட்டேன். யாராவது வந்து என்னைக் கேட்டா நான் பாண்டிச்சேரிக்கு போயிருக் கிறதாக சொல்லும்படி அம்மாகிட்டேயும் தங்கச்சிகிட்டேயும் சொல்லி வெச்சிருந்தேன்..."

சார்லஸ் குணசேகரனின் தோள்மேல் கையை வைத்தார்.

"நீயாகவே வாலண்டியரா ஸ்டேஷனுக்கு வந்து எல்லா உண்மைகளையும் ஒத்துக்கிட்ட துக்கு நன்றி. இதை நீ ஒரு ஸ்டேட்மெண்டா எழுதித்தரணும்..."

"எழுதித்தர்றேன் ஸார்..."

"அதுக்கு முந்தி நீ இன்னொரு உதவி எனக்கு பண்ணனும்..."

"சொல்லுங்க ஸார்"

"முகம் சிதைஞ்சு போன நிலையில் டெட்பாடி ஒண்ணு பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்பாட்லயிருந்து போலீஸ் மீட்டிருக்காங்க. இப்போபாடி ஜி.ஹெச் மார்ச்சுவரியில் இருக்கு. நீ பாடியோட மத்த அங்க அடையாளத்தைப் பார்த்து அது துரையப்பனா... இல்லையான்னு சொல்லணும்..."

குணசேகரன் தலையாட்டினான்.

சார்லஸ் முரளியிடம் திரும்பினான்.

"முரளி! நீங்க குணசேகரனைக் கூட்டிகிட்டு ஜி.ஹெச்சுக்கு போங்க. நான் தென்றல் லாட்ஜ்க்குப் போய் சிவானந்தத்தைக் கூட்டிகிட்டு அங்கே வந்துடறேன்..."



# 16

தென்றல் லாட்ஜ்.

வாசலில் பைக்கை நிறுத்திவிட்டு சார்லஸ் உள்ளே போக - ஒரு கஸ்டமர்க்கு பில் போட்டுக் கொண்டிருந்த சிவானந்தம் பவ்யமாய் எழுந்து நின்றான்.

"மொதல்ல கஸ்டமரை அனுப்பு" சார்லஸ் சொல்லி விட்டு நாற்காலிக்கு சாய்ந்தார். மேஜை மேல் கிடந்த நாளிதழை எடுத்துக் கொண்டார்.

சிவானந்தம் ஒரு ஐந்து நிமிஷ நேரம் செலவழித்து பில் ப்ரிப்பேர் செய்து கஸ்டமரை அனுப்பிவிட்டு திரும்ப, சார்லஸ் பத்திரிக்கையை மடித்து வைத்துவிட்டு கேட்டார்.

"நீ ஒரு அரைமணி நேரம் ஜி.ஹெச் வரைக்கும் வர முடியுமா?"

"எதுக்கு ஸார்?"

"ஒரு பாடி கிடைச்சிருக்கு. அது துரையப்பனா இல்லையான்னு பார்த்துச் சொல்லணும்."

"வர்றேன் ஸார்" சிவானந்தம் சொல்லிக் கொண்டே எழ முயல சார்லஸ் அவனைக் கையமர்த்தினார்.

"அதுக்கு முந்தி ஒரு கேள்வி"

"என்ன ஸார்..."

"இன்னிக்கு லாட்ஜுக்கு புது கஸ்டமர்ஸ் யாராவது வந்தாங்களா...?"

"ரெண்டு பேர் வந்தாங்க ஸார்..."

"அந்த லெட்ஜரை எடு பார்க்கலாம்"

சிவானந்தம் அந்த தடிமனான லெட்ஜரை எடுத்துக் கொடுத்தான்.

சார்லஸ் அந்த லெட்ஜரை வாங்கி இரண்டு நிமிஷங்கள் வரை புரட்டிப் பார்த்துவிட்டு கேட்டார்.

"இந்த லெட்ஜரை மெய்ன்டைன் பண்றது நீதானே...?"

"ஆமா... ஸார்..."

"கையெழுத்து உன்னோடது தானே?"

"ஆமா... ஸார்..."

"அப்ப... 'சிநேகா' நீதான்னு சொல்லு"

"ஸ... ஸார்..."

சிவானந்தம் திகைத்து "என்ன ஸார் சொன்னீங்க?" என்று கேட்க -

சார்லஸ் புன்னகைத்தார்.

"சிநேகா"ன்னு சொன்னேன்...! அதாவது இந்த சிநேகா... என்று சொல்லி திரும்பவும் புன்னகை செய்தவர் தன் பாக்கெட்டில் வைத்திருந்த அந்த கடிதத்தை எடுத்துக் காட்டினார்.

"இது... நீ குணசேகரனுக்கு எழுதிய மிரட்டல் கடிதம். இந்த மிரட்டல் கடிதம் என்னோட கைக்கு வந்த நிமிஷத்திலிருந்தே இதில் இருக்கிற, கையெழுத்தை எங்கேயோ பார்த்து இருக்கமே எங்கேன்னு யோசனை பண்ணி பண்ணி அலுத்து கடைசியில்தான் 'ஸ்பார்க்' ஆச்சு. அதான் உடனே இங்கே புறப்பட்டு வந்தேன். நான் நினைச்சமாதிரியே இது உன்னோட கையெழுத்துதான். பார்த்தியா... லெட்ஜர்ல இருக்கிற கையெழுத்தும் இந்த லெட்டர்ல இருக்கிற கையெழுத்தும் என்னமா ஒத்துப்போறது...?"



"ஸ... ஸார்..." சிவானந்தம் இப்போது வியர்வைக் குளியலில் இருந்தான்.

சார்லஸ் எழுந்து அவனுடைய புஜத்தை இரும்புப்பிடியாய் பிடித்தார்.

"இந்த லாட்ஜ்ல உனக்கு ரூம் கொடுத்து இருக்காங்க இல்லையா...?"

"ஆ....மா....ஸ...ஸார்..."

"வந்து காட்டு..."

ஒரு பய நடை போட்டக் கொண்டே போய் சிவானந்தம் தன்னுடைய அறையைக் காட்ட சார்லஸ் அவனை அந்த அறைக்குள் தள்ளி ஒரு மூலையில் உட்கார்த்தி வைத்து விட்டு அறையைக் கிளற ஆரம்பித்தார்.

சூட்கேசைப் புரட்டிப் போட்டதில் ஒரு டயரி தெறித்து விழுந்தது.

சார்லஸ் எடுத்தார்.

சிவப்பு காலிகோவால் பைண்ட் செய்யப்பட்ட டயரி தெறித்து விழுந்தது.

சார்லஸ் எடுத்தார்.

சிவப்பு காலிகோவால் பைண்ட் செய்யப்பட்ட டயரி அது.

முதல் பக்கத்தைப் பிரித்தார்.

கொட்டை கொட்டையாய் எழுத்துக்கள் தெரிந்தன.

சிவானந்தம்

நேசராஜ்

காதர் பாட்சா

சார்லஸ் கேட்டார்.

"சிவானந்தம் இது உன்னோட பேர் - சரி! மத்த ரெண்டு பேர் யார்...?"

"அது... வந்து... ஸார்..."

சார்லஸ்பூட்ஸ்காலை உயர்த்திசிவானந்தத்தின் இடுப்பில் ஓங்கி ஒரு மிதி மிதிக்க அவன் தன் இரு கைகளையும் உயர்த்திக் கொண்டு அலறினான்.

"அடிக்காதீங்க ஸார்...! உண்மையைச் சொல்லிடறேன்..."

"நீ இந்த இடத்துல இருந்தா உன்னோட வாயிலிருந்து முழு உண்மையும் வராது. நாம லாக்கப்புக்கு போயிடறது பெட்டர்..."

சிவானந்தத்தின் கழுத்தில் கை வைத்து ஒரு கோழிக் குஞ்சைத் தூக்குவது போல் தூக்கினார் சார்லஸ்.

## 17

போலீஸ் லாக்கப்.

சிவானந்தம் இடுப்பில் வெறும் ஜட்டியோடு மண்டிபோட்டு உட்கார்ந்திருக்க - சுற்றிலும் அஸிஸ்டண்ட் கமிஷனர் பசுபதி, இன்ஸ்பெக்டர் சார்லஸ், சப்-இன்ஸ்பெக்டர் முரளி கைகளில் லாட்டியோடு அரைவட்டம் போட்டுக் கொண்டு நின்றார்கள்.

"இப்ப... சொல்லு உண்மையை..."

சிவானந்தம்கம்மிப்போனகுரலில்சொல்ல ஆரம்பித்தான்.

"ஸார்! நான், நேசராஜ், காதர்பாட்சா மூணு பேரும் சின்ன வயது முதலே ஃப்ரண்ட்ஸ். நான் ஹிந்து, நேசராஜ் கிறிஸ்டியன், காதர்பாட்சா முஸ்லீம். வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த நாங்க மூணுபேரும் ஃப்ரண்ட்ஸா இருக்கிறதுனால எங்க பெயர்களோட முதல் எழுத்துக்களைச் சேர்த்து 'சிநேகா'ன்னு வெச்சுகிட்டோம் எங்க



மூணு பேர்க்குமே நித்யகலாவைப் பிடிக்கும். அவங்க நடிச்ச படம்ன்னா எங்களுக்கு உயிர். படத்தை பத்துதடவை பார்ப்போம். நித்யகலாவை யாராவது குறை சொன்னா எங்களுக்கு பிடிக்காது. அடிச்சிடுவோம். இந்த நிலைமையில்தான் துரையப்பன் என்னோட லாட்ஜ்லதங்க வந்தார். அவர் நித்யகலாவோட மாமாங்கிறதுனால எங்களுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். ஆனா இந்த சந்தோஷம் கொஞ்ச நாள் தான். போகப் போகவே துரையப்பன் எங்க காதுபடவே மோசமா பேச ஆரம்பிச்சதை எங்களால ஜீரணம் பண்ணிக்கமுடியலை. இது எல்லாத்துக்கும் மேலா அவர் எக்ஸ் எம்.பி. மல்லிகைக் கண்ணனோடு சேர்ந்துகிட்டு நித்யகலாவுக்கு கெட்ட பெயரை உண்டாக்க முயற்சி பண்ணினாங்க. ஃபேமிலி டாக்டர் விஜயகோபால் மூலமா வேண்டாத மருந்து மாத்திரைகளைக் கொடுத்து நித்யகலாவை மனநோயாளியாக்கவும் பார்த்தாங்க."

சார்லஸ் குறுக்கிட்டு கேட்டார்.

"அப்படீன்னா டாக்டர் விஜயகோபாலும் இதுக்கு உடந்தையா...?"

"ஆமா... ஸார்! அந்த டாக்டர் மட்டும் உடந்தை கிடையாது. அவரோடு சேர்ந்து வாட்ச்மேன் வேலுச்சாமியும் உடந்தை தான்."

"இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?"

"துரையப்பனை எங்க மூணு பேர்ல ஒருத்தர் ஃபாலோ பண்ணிட்டே இருப்போம்... நித்யகலாவுக்கு எதிரா அவரோட நடவடிக்கைகள் ரொம்பவும் மோசமா போனதால நாங்க பழிவாங்கும் படலத்தை ஆரம்பிச்சோம்."

"துரையப்பனை கொன்னுட்டீங்களா?"

"அவரைக் கொல்லலை..."

"பின்னே...?"

"அவரை காதர்பாட்சா வீட்ல கொண்டு போய் சிறை வெச்சுகிட்டோம். அவர்கிட்ட மிரட்டி விஷயங்களை வாங்கினோம். நாங்க மொதல்ல தீர்த்துக்கட்ட நினைச்சது எக்ஸ் எம்.பி. மல்லிகைக் கண்ணனைத்தான். அவர் டெல்லியிலிருந்து திரும்பின அன்னிக்கு நாங்க மூணு பேரும் மல்லிகைக் கண்ணனின் வீட்டுக்குப் போனோம். நாங்க போன போது ராத்திரி ஒரு மணி. நாங்க வீட்டுக்குப் பின்னாடி போன போது மல்லிகைக் கண்ணனுக்கும் அவரோட தம்பிக்கும் ஊழல் பண விஷயமா ஏதோ தகராறு. அந்தத் தகராறு முற்றியதில் மல்லிகைக் கண்ணனின் அடியாட்கள் தம்பியைக் குத்தி கொலை பண்ணிட்டாங்க. நாங்க நடக்கிற சம்பவங்களை உன்னிப்பா பார்த்துட்டிருந்தோம். தம்பியோட பாடியை முகம் சிதைக்கச் சொல்லி டெட்பாடியை கட்டிடத்தோட கன்ஸ்ட்ரக்ஷன் பகுதிக்கு கொண்டு போய் மணலுக்குக் கீழே சமாதி பண்ணச் சொல்லிட்டார். அவங்க பாடியை எடுத்துட்டு வேனுக்கு போகும்போது மல்லிகை கண்ணன் 'டேய் என் கண்ணுல இருந்த காண்டாக்ட் லென்ஸைக் காணோம். டெட்பாடிக்குள்ளே இருக்கான்னு செக் பிண்ணிக்குங்'ன்னு சொல்லிட்டிருந்தார்."

சிவானந்தம் சற்றே பேச்சை நிறுத்திவிட்டு தொடர்ந்தான்.

"அடியாட்கள் மல்லிகைக் கண்ணனின் தம்பியோட பாடியை எடுத்துகிட்டு போனதும் நாங்க உள்ளே நுழைஞ்சோம். பார்வைக் குறையோடு தடுமாறிக்கிட்டிருந்த மல்லிகைக் கண்ணனைத் தீர்த்துக்கட்டி பாலிதீன் பைக்குள் திணித்து மூட்டையா கட்டி கட்டிலுக்கு அடியில் தள்ளிவிட்டு வந்துட்டோம். எங்களோட ஹிட்லிஸ்ட்டில் அடுத்த படியாய் டாக்டர் விஜயகோபால், வாட்ச்மேன் வேலுச்சாமி இருந்தாங்க. அதுக்குள்ள நாங்க மாட்டிகிட்டோம்..."

"இப்ப துரையப்பனும் உன்னோட ஃப்ரண்ட்ஸும் எங்கே...?"

"அட்ரஸைச் சொல்றேன். நோட் பண்ணிக்குங்க ஸார்..."

❖ ❖ ❖ ❖

## ஜோக்ஸ்

எதுக்கு பாட்டி கதைய பாதியில நிறுத்திட்டு ஹார்லிக்ஸ் கொடுக்குறீங்க..?

இது விளம்பர இடைவேளைடா..!

**- நெல்லை த.ஞா. செல்வன்,**
பிரியம்மாள்புரம்

❖ ❖

தண்ணியில இருந்து கரண்ட் ஏன் எடுக்குறாங்க?

லூசு அப்படி எடுக்கலனா நாம குளிக்கும் போது ஷாக் அடிக்கும்.

**- நெல்லை த.ஞா. செல்வன்,**
பிரியம்மாள்புரம்